www.padippakam.com


# செய்திகள்

வெளியீடு: 21

EPIc


* * * * * *

எமது மக்கள் என்றைக்கு அமைதியான சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றார்களோ அன்றைக்குத்தான் நாம் ஓய்வெடுத்துக்கொள்ள முடியும்.

தோழர். க. பத்மநாபா.

* * * * * *

# வடபகுதி எங்கும் விமானத்தாக்குதல்கள்

## மக்கள் மீண்டும் அகதிகளாக்கப்படுகின்றனர். புலிகளின் படுகொலைகள், அடக்குமுறைகள் தொடர்கின்றன.

ஸ்ரீலங்கா விமானக் கூலிப்படையினரின் ஹெலி, பொம்மர்கள் மூலமான விமானத் தாக்குதல்கள் கடந்த சில வாரங்களாக மீண்டும் தொடர்ச்சியாக வடபகுதி எங்கும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் அச்சமும் பீதியும் கொண்டுள்ள மக்கள் அகதிகளாக்கப்படுகின்றனர்.

தொடர்ச்சியான விமானக் குண்டுவீச்சு தாக்குதல்களினால் வடபகுதியெங்கும் பலத்த சேதங்களும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இதுவிர புலிகள் முஸ்லீம் மக்களையும் ...ங்கள மக்களையும் படுகொலை செ... வருகின்றனர். கிளிநொச்சி, நெ...கேணி பகுதிகளிலும் யாழ் நகரி... ஒரே நேரத்தில் விமானத் தாக்...கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. ...ல் பத்து பேர் பலியானதுடன் பல...டு காயமடைந்துள்ளனர்.

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் தாபற் கந்தோருக்கருகில் இடம் பெற்ற ஹெலித்தாக்குதலில் பூனகரி சென்று கொண்டிருந்த லொறி ஒன்றின் சாரதி உட்பட ஆறு பேர் பலியாகினர். ஹெலி முற்றாக சேதமடைந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து புளியங்கூடலுக்கு செல்லவிருந்த பஸ் ஒன்று விமானத் தாக்குதலுக்குள்ளானது. இதில் பிரயாணம் செய்த நால்வர் பலியாகியதோடு இத் தாக்குதலில் யாழ் மத்திய சந்தைப் பகுதி சேதமடைந்துள்ளது.

வல்வெட்டித் துறையில் நடைபெற்ற ஹெலித்தாக்குதலில் ஆறு பேர் பலியானதாகவும் இருபதுக்கு மேற் பட்டோர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் அருகே இடம் பெற்ற ஹெலித்தாக்குதலில் சட்டநாதர் கோவிலடியில் ஷெல் விழுந்ததில் இராஜேஸ்வரி பொன்னம்பலம் என்னும் பெண் ஸ்தலத்திலேயே தலை சிதறி மரணமானார். இவர் வவுனியா மக்கள் வங்கி பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

### வவுனியா

வவுனியாவில் நடாத்தப்பட்டுள்ள விமானத் தாக்குதலில், மூன்று அரிசி ஆலைகளும், வேப்பங்குளத்தில் ஐந்து வீடுகளும், பெரியகட்டு என்னுமிடத்தில் ஒரு வீடும் சேதமடைந்துள்ளன. அரச படைகளின் விமானத் தாக்குதல்களில் இருந்தும், புலிகளின் அடக்கு முறைகளிலிருந்தும் தப்பி கொழும்பு செல்லவென வவுனியா வரும் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். குடா நாட்டை விட்டு வெளியேறுவதற்கு புலிகளிடம் அனுமதி பெற வேண்டியுள்ளது. இவ்வனுமதி பெறுவதற்கு வெய்யிலென்றும் மழையென்றும் பாராது மணிக்கணக்கில் கால் கடுக்க பல நாட்கள் காவல் நின்று அனுமதி பத்திரம் பெறுவதுடன், துரோகி என்ற பட்டத்தையும் சன்மானமாக பெற்றுக்கொண்டே குடா நாட்டை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் வவுனியா வந்தடைந்ததும் இராணுவ தடைமுகாமில் ஸ்ரீலங்கா அரச படைகளினால் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப் பட்டு வருகின்றனர். இவ்வளவு இன்னல்களையும் அனுபவித்து வவுனியா வரும் மக்கள் அங்கும் விமானத் தாக்குதல்கள் இடம் பெறுவதால் பெரும் பீதியும் அச்சமும் கொண்டுள்ளனர்.

விமானத் தாக்குதலுக்கு அஞ்சி அகதிகளாக முன்னூற்றெட்டு குடும்பங்கள் குடாநாட்டிலிருந்து வவுனியா சென்றடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### நீர்வேலி கண்ணாடி தொழிற்சாலை சேதம்

நீர்வேலி, இருபாலை சந்தி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

நீர்வேலியில் நடந்த தாக்குதலில் கண்ணாடி இளைத் தொழிற்சாலை சேதமடைந்துள்ளது.

இருபத்திநாலு மணிநேர ஊரடங்கை பிறப்பித்துவிட்டு, முல்லைத்தீவு, கனகராஜன் குளம், நெடுங்கேணி, மடுக்கோவில், பன்றிவிரிச்சான், பெரியதம்பனை, இரணை இலுப்பைகுளம் ஆகிய பகுதிகளில் பொம்மர்கள் தாளப்பறந்து குண்டுகளை வீசியுள்ளன.

இரணைஇலுப்பக்குளப்பகுதியில் ஐந்து கடைகளும், பல வீடுகளும் சேதமடைந்துள்ளன. இதுதவிர பொம்மர் தாக்குதலால் பதினைந்து மாடுகள் இறந்துள்ளன. இப்பகுதியில்உள்ள வைத்தியசாலையின் விடுதியொன்றும் சேதமடைந்துள்ளது. கிளிநொச்சி கரடிப்போக்கு பகுதிகளில் விமானத் தாக்குதலால் பலவீடுகள் சேதமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நெடுங்கேணியில் பிரயாணிகளை ஏற்றிச்சென்ற வாகனமொன்று விமானத் தாக்குதலுக்குள்ளாகியது. இத்தாக்குதலில் பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்களில் ஏழுபேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் மேலும் எட்டு பேர் மரணமானதை தொடர்ந்து பலியானோர் தொகை பதினைந்தாக உயர்ந்துள்ளது. இச்சம்பவத்தில் ஒன்பதுபேர் படுகாயமடைந்துள்ளனர்.

### படுகொலைகள்

ஏறாவூரிலிருந்து காத்தான் குடிக்கு தனியார் வாகனமொன்றில் பிரயாணம் செய்த இரு முஸ்லீம் மக்களை, ஏறாவூருக்கு மூன்று மைல் தூரத்தில் வைத்து புலிகள் வாகனத்திலிருந்து இறக்கி சுட்டுக் கொன்றுள்ளனர்.

மட்டக்களப்பு சித்தாண்டி என்னுமிடத்தில் கந்தசாமி என்பவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். படையினருக்கு தகவல் கொடுத்தார் என்னும் வழமையான ஒப்பாரியை புலிகள் ஒப்புவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் மகாஓயா பொலீஸ் பகுதியை சேர்ந்த போகமுயாய என்னும் கிராமத்தில் இருபத்தேழு அப்பாவி சிங்கள பொது மக்கள் புலிகளினால் கோரமாக வெட்டி கொலை செய்யப் பட்டுள்ளனர். ஐந்து ஆண்களும், ஏழு பெண்களும், பதினைந்து குழந்தைகளுமே கொல்லப்பட்டவர்கள்.

நொச்சி மோட்டையில் இடம் பெற்ற பொம்மர் தாக்குதலில், யாழ்ப்பாணம் செல்வதற்கென நொச்சிமோட்டை பாலத்துக்கருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு மினி பஸ்கள் தீப்பற்றி எரிந்தன.

# தமிழ்நாடு தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது

## கருணாநிதி பதவி இழந்தார்

தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த திராவிடமுன்னேற்றக்கழகத்தின் அரசு கலைக்கப்பட்டுள்ளது. இந்திய மத்திய அரசின் பிரதமராக இருந்த வி.பி. சிங் அமைச்சரவை கலைக்கப்பட்டதை தொடர்ந்து, ஜனதா சோஷலிஸ்ட் கட்சியின் தலைவர் சந்திரசேகர் பதவியேற்றார். இந்திராகாங்கிரசின் அனுசரணையுடன் பிரதமராகியுள்ள சந்திரசேகரால் வி.பி.சிங்கின் தேசிய கூட்டணியில் அங்கம் வகுத்து வரும் தி.மு.க. வின் தமிழக ஆட்சிக்கும், கருணாநிதிக்கும் ஆபத்து வரும் என அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்த்திருந்தன. அத்துடன் கருணாநிதியின் அரசியல் எதிரிகளில் ஒருவரான சுப்பிரமணியசுவாமி சந்திரசேகரின் அமைச்சரவையில் அமைச்சரானதும் கருணாநிதிக்கான ஆபத்து கூடிக்கொண்டது. அண்மைக்காலங்களில் இலங்கைத்தமிழர் நிலை தொடர்பாக கருணாநிதி ஒரு தலைப்பட்சமாக நடந்து வந்துள்ளார். இலங்கையரசின் கெடுபிடிகளுக்கும், புலிகளின் அராஜகங்களுக்கும் அஞ்சி கப்பலில் தமிழகம் வந்த அகதிகளை ஏற்றுக் கொள்ள கருநாநிதி மறுத்து விட்டார். இலங்கைபோராளிக்குழுக்களிடமிருந்து ஆயுதங்களை பறித்துக்கொண்ட கருணாநிதி புலிகளை மட்டும் ஆயுதங்களுடன் உலாவவிட்டார். இதனால் புலிகள் தமிழகத்தில் நடாத்திய அராஜக செயல்கள் அனைத்திற்கும் கருணாநிதி தமிழகமக்களின் பழிச் சொல்லுக்கு ஆளாகவேண்டி வந்தது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர். க. பத்மநாபா உட்பட பதின்மூன்று தோழர்கள் கோழைத்தனமாக புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதை தொடர்ந்து கருணாநிதி புலிகள் உறவு அம்பலமாகியது. சந்திரசேகர் பதவியேற்றதும் ஆயுதம் தாங்கிய போராளிகளை கைது செய்யும்படி கருணாநிதியை வற்புறுத்தினார். கருணாநிதியோ ஆயுதம் தாங்கிய புலிகளை உலாவவிட்டு, நிராயுதபாணிகளை கைதுசெய்தார் என்பதும், தமிழகத்தில் புலிகள் மூலம் கொலைக்கலாச்சாரத்தை பரவவிட்டு கைகட்டிபார்த்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஒரு மனிதன் மறைந்த ஓராண்டு அஞ்சலி

வடக்குகிழக்கு மாகாண அரசின் உறுப்பினரும், மாகாண அரசில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பிரதம கொறடாவாகவும் விளங்கிய தோழர். ஜோர்ஜ் தவராசா தம்பிராசா, பாசிசப்புலிகளால் கோழைத்தனமாக 10-4-90 ல் படுகொலைசெய்யப்பட்டு ஓராண்டாகிறது.

ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியின் ஆரம்பகால உறுப்பினரான தோழர். ஜோர்ஜ். ஜேர்மனி, பாலஸ்தீனம், நிகரகுவா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஈழத்தமிழர்களின் பிரச்சனைகளை எடுத்துக்கூறுவதில் நீண்டகாலமாக பணியாற்றினார்.

நிகரகுவா புரட்சியின் இறுதிக்காலகட்டத்திலும், புரட்சியின் பின்பு நாட்டை கட்டிஎழுப்புவதிலும், நிக்கரகுவாபுரட்சியாளர்களுடன் தோளோடு தோள் நின்று பங்களிப்பு வழங்கியவர்களான தோழர் கார்லோஸ் பொன்சேகா, மற்றும் நிக்கரகுவா முன்னாள் அதிபர் தோழர் டானியல் ஒட்டேகா போன்றோரின் நெருங்கிய நண்பராகவும் தோழர் ஜோர்ஜ் விளங்கினார்.

லத்தீன் அமெரிக்க விடுதலை போராட்ட இயக்கங்களோடும், பெண்விடுதலை அமைப்புக்களோடும் இவரது உழைப்பு இணைந்திருந்தது. சர்வதேசமெங்கும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் விடுதலைக்காக குரலெழுப்பிய அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றியதோடு புரட்சிகர இயக்கங்களில் தன் பங்களிப்பையும் வழங்கியவர் இவர்.

87 இன் பிற்பகுதியில் தனது தாயகத்தில் நிலவியிருந்த நெருக்கடியான சூழ்நிலையில், தனதுபணியைத் தொடர ஈழத்திற்கு வந்தார். தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுக்காக உழைப்பதைச் சவாலாக எடுத்துக்கொண்டு வேலைகளில் ஈடுபட்டதோடு, வெகுவிரைவிலேயே திருகோணமலை மக்களின் பேரன்புக்குரியவரானார்.

மாகாணசபை உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் ஜோர்ஜ் மாகாணஅரசின் நிர்வாகத்தை கட்டி எழுப்புவதில் தனது அனுபவ செழுமையை பயன்படுத்தினார். மத்திய அரசிடமிருந்து மாகாணஅரசுக்கான அதிகாரங்களை பறித்தெடுக்கும் விதத்திலான தோழரின் அணுகுமுறை தனித்துவமானதாக இருந்தது. திருகோணமலை பகுதியில் "ஜோர்ஜ் முறை" என்ற ஒரு அணுகுமுறை பேசப்படும் அளவிற்கு இவரது ஆளுமைச்சிறப்பிருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ். தோழர்களினால் கூபா தோழர்என்று செல்லமாக அழைக்கப்பட்டதோழர். ஜோர்ஜ், திருகோணமலையில் சிங்களக் காடையர்களினால் தமிழ் மக்கள் தாக்கப்பட்ட போது, அங்கிருந்த தமிழ்மக்கள் நம்பிக் கேட்டுச்சென்ற இயக்கங்கள் கைகழுவிவிட்ட நேரத்தில், திருகோணமலையில் தமிழ் மக்களை பாதுகாப்பபதில் மக்களோடு இணைந்து நின்றார். சிங்கள மக்களின் ஐக்கியத்தையும், தமிழ்மக்கள் பாதுகாப்பாக வாழலாம் என்ற உணர்வையும் திருகோணமலை மக்களுக்கு ஏற்படுத்துவதில் துணிந்து செயலாற்றியதில் தோழர் ஜோர்ஜின் பங்கு மகத்தானது.

படிப்பகம்

# ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர்கள் கொலைக்கு இலங்கைஅரசே பொறுப்பு

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் என்ன பேச்சு வார்த்தை நடாத்தியது என்பது இதுவரை எவருக்கும் தெரியாது. நாட்டுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் மறைத்து இரகசிய பேச்சுக்களை நடத்தினர். அதன் விளைவுகளை நாடு இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறது. பத்மநாபா, கிருபாகரன், யோகசங்கரி உட்பட தமிழ் தலைவர்களின் கொலைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற கொறடா திரு. ரிச்சார்ட் பதிரத்தின கூறினார்.

சென்னையில் கொல்லப்பட்ட, ஈழமக்கள்புரட்சிகரவிடுதலை முன்னணியின் செயலாளர்நாயகம் தோழர் க.பத்மநாபா உட்பட பதின்மூன்று தோழர்களின் மறைவுக்கு அஞ்சலி தெரிவிக்கு முகமாககொழும்பில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் பேசியபோதே அவர் அவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. ரிச்சார்ட் பதிரத்ன மேலும் பேசியதாவது,

அரசாங்கத்துடன் புலிகள் பேச்சு வார்த்தை நடத்தும் போது அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சாம் தம்பிமுத்து ஆகியோர் கொல்லப்பட்டனர் அந்த சந்தர்ப்பத்திலாவது அரசாங்கத்திற்கு ஞானம் பிறந்திருக்க வேண்டும். அரசு பேச்சில் ஈடுபட்டிருந்த சமயத்தில் புலகள் இராணுவநடவடிக்கைகளை பலப்படுத்தினர். இவர்கள் இங்கு மாகாண சபையை கலைக்க சட்டமூலங்களை தயாரித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் அங்கு பங்கர்களையும் மண்மூடைகளையும் அமைத்துக்கொண்டிருந்தனர்.

இன்று ஏற்பட்டுள்ள நிலமைக்கு அரசின் தவறான கணிப்புகளே காரணமாகும். இந்த தவறான கணிப்புகளை பயன் படுத்தி தமிழ்அரசியல் தலைவர்களை புலிகள் திட்டமிட்டு படுகொலையும் செய்து வந்தனர்.

யோகசங்கரியுடன் நான் தனிப்பட்ட முறையில் நெருக்கமானவன். அவர் ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு நீதியான தீர்வு கிடைக்க வேண்டும் என்று விரும்பியவர். இந்தப்படுகொலைகளை வன்மையாக கண்டிப்பதுடன் மறைந்த தலைவர்களுக்கு எமது கட்சியின் சார்பில் அஞ்சலியையும் தெரிவித்து கொள்கிறேன்.

ரெலோ இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் திரு.என்.ஸ்ரீகாந்தா பேசியதாவது,

எமது சகோதர இயக்க தலைவர்களின் படுகொலைகளுக்கு தமிழர் பாஸிச சக்திகளே காரணமாகும். இன்று வடக்குகிழக்கில் நடப்பது தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமான யுத்தமல்ல, ஜனநாயகத்துக்கும் சர்வாதிகாரத்துக்கும் இடையிலான யுத்தமாகும். இந்த தர்மயுத்தத்தில் நிச்சயம் ஜனநாயகம் வெற்றிபெற வேண்டும். இன்று நாட்டின் தமிழ் சிங்கள முஸ்லீம் அனைத்து பிரிவுகளும் ஜனநாயகத்தின் வெற்றிக்காக தமது ஆதரவை நல்கியுள்ளன. ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர்கள் தமிழ்நாட்டில் ஐந்து கோடி தமிழர்கள் மத்தியில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழக முதல்வர், கொலைகாரர்களை விட்டுவிட்டு அப்பாவிகளை பிடித்து சிறையில் அடைத்து வைத்துள்ளார்.

தமிழகமுதல்வரை ஈழத்தமிழர்களின் அனுதாபியாக நாம் கருத முடியாது. இனி இலங்கை தமிழர்பிரச்சனையில் அவர் தலையிட வேண்டாம் என்றுஇந்த மேடையில் இருந்து அவருக்கு கோரிக்கை விடுக்க விரும்புகிறேன்.

லங்காசமசமாஜக் கட்சியின் தலைவர் தோழர் அத்தாவுட செனிவரத்னா பேசியதாவது. ஈ.பி.ஆர். எல். எவ். அமைப்புக்கும், எமது கட்சிக்கும் பலவிடயங்களில் அடிப்படை ஒற்றுமை உண்டு. பாராளுமன்றத்திலும் மக்களுக்கு பாதகமான விடயங்களை எதிர்த்து நாம் இணைந்து நடவடிக்கைகள் எடுத்ததுண்டு. ஈ.பி. ஆர். எல். எவ். அமைப்பு அரிய இலட்சியத்திற்காய் செயல்பட்டு வரும் அமைப்பு. தலைவர்களை கொல்வதால் இலட்சியங்களை அழித்துவிட முடியாது. அனைத்திலங்கை முற்போக்கு, இடதுசாரி, ஜனநாயக சக்திகள் இணைந்து செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது.

ஈழத்தேசியஜனநாயகமுன்னணி சார்பில் பேசிய திரு. ராஜரத்தினம்(வடக்குகிழக்கு மாகாண அமைச்சர்) பேசியதாவது,

தமிழ் அரசியல் வாதிகளை கொலை செய்வதன் மூலம் தமது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்று கருதினால் காலம் அரிய பாடத்தை புகட்டியே தீரும். வடக்கு கிழக்கில் அர்த்தமற்ற யுத்தமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மக்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். ஆயிரக் கணக்கில் அநியாயமாக இறந்து விட்டனர். பல லட்சக் கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். தமிழினத்துக்காக செயல்படுபவர்களாயின் இவ்வாறு மக்களை வேதனை கடலில் தள்ள மாட்டார்கள். மறைந்த தலைவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலினை செலுத்துகிறோம்.

சௌஜன மக்கள் கட்சி பொது செயலாளர் டாக்டர் ராஜித செனிவரத்தினா பேசியதாவது,

தமிழர் அரசியல் கட்சிகளுக்கு மட்டுமன்றி தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கும் தற்போது எச்சரிக்கைகள் வந்து விட்டன. முஸ்லீம் காங்கிரசுடன் தொடர்பு வைத்திருந்தால் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளின் காரணமாக இன்று வடக்கு கிழகில் யுத்தம் ஏற்பட்டுள்ளது. அரசின் தவறுக்கென மக்களிடத்தில் இருந்து பாதுகாப்புக்கென நிதி கோரப்படுகிறது.

வடக்குகிழக்க மாகாண அமைச்சர் தோழர் அபுயூசுப் தலமை வகுத்த இவ்வஞ்சலிக்கூட்டத்திற்கு செயலாளர் நாயகம் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சமூகமளித்திருந்தார்.

## தமிழ் முஸ்லீம் உறவு புத்துயிரளிக்கப்பட வேண்டும்

தமிழ் முஸ்லீம் சமூகங்கள் ஒன்றோடொன்று சகோதரத்துவமாக வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதை நிவர்த்தி செய்யும் பணியில் இன்று தமிழ் முஸ்லீம் கட்சிகள் சிநேகபூர்வமான பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து நல்ல சுமுகமான தீர்வுக்கு வந்துள்ளன. மீண்டும் தமிழ் முஸ்லீம் உறவுக்கு புத்துயிர் அளிக்க அனைவரும் அணிதிரள வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல எம். பி யுமான அட்டாஜ் எம்.எச். எம். அஷ்ரப் நிந்தவூரில புதிதாக கட்டப்பட்ட பல்சிகிச்சை நிலையத்தின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசும் போதே இவ் வேண்டுகோளை விடுத்தார்.

## மன்னார் மாவட்டத்துக்கு நிவாரணம் தேவை.

வெளி மாவட்டங்களுடன் தொடர்பு துண்டிக்கப்பட்ட பரிதாபகரமான நிலையில் வாழ்ந்து வரும் மன்னார்மாவட்ட[illegible] களுக்கும் பிறமாவட்டமக்கள் பெறும் [illegible]தியாவசிய உதவிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். நிவாரண வசதிகள் போக்குவரத்து வசதிகள், விவசா[illegible] செய்வதற்கான வசதிகள் என்பன செ[illegible] கொடுக்கப்பட வேண்டும் என வவுனி[illegible] மாவட்ட, ஈழமக்கள் புரட்சிகரவி[illegible]லை முன்னணியின் பாராளுமன்ற உறுப்[illegible]னர் தோழர். இம்மானுவல் டி சல்[illegible] பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

> மனித இனத்தின் வாழ்க்கைக்கும் எதிர்காலத்துக்குமான போராட்டமானது, சகலமக்களினதும் அவர்களின் தேசத்தலைவர்களினதும் தவிர்க்கமுடியாத கடமையென நாம் கருதுகிறோம்.

## குமரி அனந்தனுக்கு புலிகளின் வெடிகுண்டு மிரட்டல்

சட்டசபை காங்கிரஸ் கட்சி துணைதலைவர் குமரிஅனந்தனுக்கு புலிகள் விடுத்த வெடிகுண்டு மிரட்டல் கண்டிக்கத் தக்கதாகும். புலிகள் மீது முதல்வர் அனுதாபம் காட்டுகிறார். என்று தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி புகார் கூறியுள்ளார். குமரிஅனந்தன் வீட்டில் வெடிகுண்டு வைத்திருப்பதாக புலிகள் தொலைபேசிமூலம் எச்சரிக்கை செய்துள்ளதாக வெளியாகியிருக்கும் செய்தி ஒதுக்கிவிடக்கூடியதல்ல. புலிகளை கைது செய்து காவலில் வைத்திருப்பதாக முதல்வர் திரும்பத் திரும்பச் சொல்லி வருவது எத்தகைய கேலிக்கூத்து என்பதும் புலிகள் என்ற பெயரில் அப்பாவி தமிழ் அகதிகளை கைது செய்துள்ளதாக நான் அடிக்கடி வலியுறுத்தி கூறிவருவதில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதும் குமரி அனந்தனுக்கு புலிகள் மூலம் வந்துள்ள மிரட்டல் நிரூபித்துள்ளது. கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த பதினொரு புலிகள் வேலூர் சிறையிலிருந்து எக்காரணமுமின்றி விடுதலைசெய்யப்பட்டுள்ளதாய் செய்திகள் வெளியாகியுள்ளன. இதிலிருந்து கருணாநிதி புலிகளுக்கு எந்த அளவுக்கு அனுதாபம் காட்டுகிறார் என்பது தெளிவாகிறது. ஆட்சிக்கு எதிராக உள்ளவர்களை அரசியல் ரீதியாக சந்திக்க திராணியற்ற கருணாநிதி, அரசியல் எதிரிகளை தீர்த்துக்கட்ட புலிகளை பயன்படுத்துகிறாரோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அப்படி ஏதேனும் அசம்பாவிதம் தமிழகத்தில் ஏற்படுமானால் அதற்கான முழுப்பொறுப்பையும் திமுக அரசே ஏற்க வேண்டும் என்று வாழப்பாடி ராமமூர்த்தி வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் அதிகாரத்தை அன்று வழங்கி இருப்பின் இன்று பிரச்சனையே இராது

அரசியல் அமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்திற்கமைய மாகாணசபைகளுக்கு கிடைக்க வேண்டிய அதிகாரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. மாகாண பொலிஸ் ஆணைக்குழுவோ அதன்படி நியமிக்கப்படவேண்டிய உதவிபொலிஸ் மாஅதிபரோ நியமிக்கப்படவில்லை. மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்க தயங்குகிறது போல் தெரிகிறது. வடக்குகிழக்கு பிரச்சனை காரணமாகவே பொலிஸ்அதிகாரம் வழங்க அரசு தயங்குகிறதுபோல் தெரிகிறது அன்று வடக்குகிழக்கு மாகாண முதல்வர் திரு. வரதராஜபெருமாள் கேட்டபோதே பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பின், இன்று வடக்குகிழக்கு பிரச்சனையே தோன்றியிருக்காது. அன்று பொலிஸ் அதிகாரத்தினை வழங்கி வரதராஜபெருமாளின் கையை பலப்படுத்தியிருப்பின் புலிகள் நினைத்தபடி ஆடியிருக்க முடியாது அதற்குபதிலாக இந்த அரசு செய்ததென்ன? புலிகளுக்கு பாலூட்டி மாகாண நிர்வாகத்தை சீர்குலைக்க செய்தது. அதன்காரணமாகவே வடக்குகிழக்கில் அராஜகம் ஏற்படலாயிற்று. அதனால் முழுப்பொறுப்பையும் அரசே பொறுப்பேற்க வேண்டும் என சப்ரமுவ மாகாணசபையில் நடந்த விவாதமொன்றில் உரையாற்றிய எதிர்கட்சி தலைவர் எச். ஆர். மித்ரபாலா கூறினார்.

## போராளிகள் உண்ணாவிரதம்.

தங்களை விடுதலை செய்யக் கோரி புழல் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் போராளிகள் நேற்று அடையாள உண்ணாவிரதம் இருந்தனர்.

புழல் முகாமில் ஈ.பி.ஆர். எல். எப், பிளாட் உட்பட இலங்கை போராளிகளும் அவர்களது குடும்பங்களும் அடைத்து வைக்கப்பட்டு உள்ளனர். இவர்களுக்கு சரியான சுகாதார வசதியும், அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை என்று அகதிகள் புகார் கூறிவந்தனர். தேவையில்லாமல் தாங்கள் அடைத்து வைக்கப்பட்டு இருப்பதாகவும் தங்களை விடுதலை செய்ய வேண்டும் எனவும் கோரி இவர்கள் உண்ணாவிரதமிருந்தனர். தங்கள் கோரிக்கை நிறைவேறாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாகவும் அகதிகள் தெரிவித்துள்ளனர்.

## முஸ்லீம் மக்கள் தனி மாகாண சபை கேட்டால், சிங்கள மக்களும் கேட்க வேண்டி வரலாம். சோமபால கந்தவின்ன.

இன்று கிழக்கில் முஸ்லீம் மக்கள் தனியான ஒரு மாகாண சபையைக் கேட்கின்றனர். இது நடைமுறைப் படுத்தப்பட்டால் அங்கு சிறுபான்மையினராக உள்ள சிங்கள மக்களும் தமக்கென ஒரு மாகாணசபையைக் கேட்கலாம். இதனால் பிரச்சினை தொடரவே வழி வகுக்கும். இதனால் மாகாணசபைக்குச் சேர வேண்டிய முழுஅதிகாரங்களும் வழங்கப்படல் வேண்டும் என சப்ரகமுவ மாகாணசபையின் எதிர் கட்சி கொறடா சோமபால கந்தவின்ன கோரிக்கை விடுத்தார்.

சப்ரகமுவ மாகாணசபைக் கூட்டம் அவைத் தலைவர் ஹேமபாலா தசநாயக்கா தலைமையில் நடைபெற்றது. அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்கள் வழங்கப் படாது போனால் அவை அவற்றை பலாத்காரமாக பெற முயற்சிக்கலாம். வடக்கு-கிழக்கு மாகாணசபையை சரியாக செயல்பட இடமளித்திருப்பின் இன்றைய வடக்கு-கிழக்கு யுத்தம் ஏற்பட்டிருக்காது.

25332 சதுர மைல்கள் பரப்புடைய இலங்கையின் ஒற்றையாட்சிக்கு சவால் ஏற்பட்டிருக்காது. வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு நியாயமான அரசியல் தீர்வு காணாது போனால் மேற்படி 25332 சதுர மைல்களைக் கொண்ட நாடான இலங்கை தொடர்ந்து இருக்கவும் முடியாது.

இன்று வடக்கு-கிழக்கின் நிலைஎன்ன? ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பிய இயக்கங்கள், கட்சிகள் அநாதரவான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. அரசியல் ரீதியான நிர்வாகம் சக்தி பெற படை பலமும் தேவை. பொலீஸ் அதிகாரம் கிடையாத ஒரு முதலமைச்சர் நிலைக்க முடியாது. பொலீஸ் அதிகாரமில்லாமல் மாகாணசபையால் வரிகளை வசூலிக்க முடியாது. வரி கட்டுவதிலிருந்து எவரும் தப்பித்துக் கொள்ளலாம். அவர்களை பிடியில் சிக்கவைக்க முடியாது. மாகாண சபைக்கென ஒரு பொலீஸ் படையை உருவாக்குவதன் மூலமே அதை செய்ய முடியும்.

அதிகாரப் பரவலாக்கலை நிறுத்தி விட முடியாது. அப்படி அதிகாரம் வழங்கப்படாவிட்டால் மாகாண சபை அதிகாரங்களை பலவந்தமாக பெற முயற்சிக்கலாம். வடக்கு-கிழக்கு பிரச்சினை எல். ரி. ரி. ஈ பிரச்சினை மாத்திரமல்ல. அப்படியானால் எல். ரி. ரி. ஈ தொடர்ந்து நிலைத்திருக்க முடியாது. பிரபாகரன் இல்லா விட்டால் இன்னொரு மாத்தயா அல்லது வேறு ஒருவர் தலைமை ஏற்று வழிநடத்தலாம். பிரபாகரனின் செயல்பாட்டுக்குரிய அடிப்படைப்பிரச்சனையை தீர்க்காமல் பிரபாகரனை ஒழித்து விட முடியாது. எனக் குறிப்பிட்டார்.

## நிரந்தர தீர்வுக்கு சு.கட்சி தனது பங்களிப்பை செய்யவேண்டும். தோழர் க.பிரேமச்சந்திரன்.

இனப்பிரச்சினைக்கு அரசாங்கத்திடமிருந்து இதய சுத்தியான அணுகுமுறையும் சுதந்திரக் கட்சியிடமிருந்து மனப்பூர்வமான ஒத்துழைப்பும் அவசியப் படுகிறது. அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு ஏற்பட்டால் வட கிழக்கு யுத்த நிலை மறைந்து விடுமென ஈ.பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மேற்படி பிரச்சினைக்கு தீர்வு காண நீதியான பங்களிப்பு செய்யுமாறு தாம் எதிர் கட்சி தலைவியை சந்தித்து கேட்கப் போவதாக தெரிவித்தார்.

இன்றைய நெருக்கடியில் தேசிய கட்சிகள் இக் கடமையிலிருந்து நழுவினால் நாடே கெட்டுக் குட்டிச் சுவராகி சுடுகாடாக மாறும் நிலை தான் ஏற்படும்.

அரசியல் தீர்வுக்கான கடைசிச் சந்தர்ப்பம் இன்று ஏற்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியும் இது தொடர்பாக தனது பங்களிப்பை சரிவரச் செய்யாவிடில் நாட்டுக்கும் மக்களுக்கும் தவறு இழைத்ததாகி விடும் என்றார்.

# மட்டு,அம்பாறை பகுதிகளில் அடைமழை காடுகளில் அகதிகள் அவலவாழ்க்கை.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த வியாளக்கிழமை தொடக்கம் மழைபெய்து வருவதனால் நகரிலுள்ள அகதி முகாம்களிலும், காட்டுப்பகுதிகளிலும் வாழ்ந்துவரும் அகதிகள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.
வவுணதீவு, கொக்கட்டிச்சோலை பகுதிகளில் மழைகாரணமாக சில வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் படுவான்கரை பிரதேசத்திலிருந்து மட்டுநகருக்கு மக்கள் வருவதிலும் பிரச்சனை தோன்றியுள்ளது.
காட்டுப்பகுதிகளிலும் சிறு சிறு குடிசைகள் கட்டி வாழ்க்கை நடத்தும் அகதிகள் தற்போது வெள்ளம் காரணமாக பரண் அமைத்துக்கொண்டு குடிசைகளிலேயே முடங்கிக் கிடப்பதாக அங்கிருந்து வருவோர் கூறுகின்றனர்.
மழைகாரணமாக அப்பகுதிகளிலுள்ள அகதிகள் நகருக்கு வந்து உணவுப்பொருட்கள் எடுத்துச் செல்லவும் முடியாதுள்ளது. அரசாங்க உணவு நிவாரணங்களும் உரிய இடங்களுக்கு போக முடியாதுள்ளது. வெள்ளத்தினால் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.
படுவான்கரையில் தற்போது அகதிகள்தங்கியுள்ள பெரும்பாலான பகுதிகள் வருடா வருடம் ஏற்படும் வெள்ளத்தில் மூழ்கிப்போகும் இடங்களாகும்.
இதேவேளை மட்டுநகர் பாடசாலைகளில் தங்கியிருந்த அகதிகள் பரீட்சை ஏற்பாடுகளுக்காக வேறிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதால் கூடாரங்களில் தங்கியுள்ள அவர்கள் மழையினால் அவதியுறுகின்றனர். தூவானத்தினாலும் நிலம் நீரூறியதாலும் இரவில் உறங்குவது அகதிகளால் முடியாமலுள்ளது.

<u>தற்காலிக ஆஸ்பத்திரி</u>

அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் மயிலவட்டுவானில் தற்காலிக ஆஸ்பத்திரியொன்று திறக்கப்பட்டுள்ளது. சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரின் உதவியுடன் மருந்துப்பொருட்கள் அங்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

# மட்டு,அம்பாறை பகுதிகளில் 1900 பேர் தொடர்பாக எந்த தகவலும் இல்லை.

**தோழர் க.பிரேமச்சந்திரன்.**

கடந்த யூன் மாதம் மோதல் ஆரம்பமானதின் பின்னர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 1900பேர்வரை காணாமல் போயிருக்கிறார்கள். அப்பகுதி பிரஜைகள் குழு, சமாதானக் குழுக்களிடமிருந்து இந்த தகவல் கிடைத்துள்ளது என்று ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரன் எம். பி. தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் காணாமல்போன கூடுதலானவர்கள் பற்றி தகவல் தெரியாமல் உள்ளது.

இது குறித்து அரசாங்கத்தினதும் பாதுகாப்பு அமைச்சினதும் கவனத்திற்கு கொண்டு வர. நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போனோரில் பெரும்பாலானவர்கள் பாதுகாப்புப் பிரிவினராலேயே கைது செய்யப் பட்டுள்ளனர்

வந்தாறுமூலை அகதி முகாமில் கைதானவர்கள் தொடர்பாக எதுவித தகவலும் இல்லை. சிலர் விடுதலை செய்யப்பட்டதாக கூறப்பட்டதாயினும் அவர்களை நேரில் பார்த்ததாக யாருமில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 1100பேர் பற்றி தகவல் இல்லை. அம்பாறை மாவட்டத்தில் 800 இற்கு மேற்பட்டவர்களின் தகவல் இல்லை. பிரஜைகள் குழு சமாதானக் குழுக்களின் மூலம் காணாமல் போனவர்களின் பெயர் பட்டியலை தயாரித்து வருகிறோம்.

இவ்வாறு தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்

# மாகாண சபைகள் தொடர்பாக யு.என்.பிக்குள் முரண்பாடு.

**சபையில் அஷ்ரப் எம்.பி.**

ஜனாதிபதியின் கொள்கைகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளுக்கும் இடையேமுரண்பாடு இருப்பது போல தெரிகிறது. ஐ. தே. க. உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பேசுபவற்றை நோக்கும் போது வடக்கு-கிழக்கு மாகாணஇணைப்பைத் துண்டித்து மீண்டும் 9 மாகாணங்களை ஏற்படுத்தி விட்டால் சகல பிரச்சினைகளும் தீர்ந்து விடுமென அவர்கள் உணர்கின்றார்கள் என்றே கருத வேண்டியுள்ளது.

சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட எம். பி. அஷ்ரப் வெள்ளிமாலை இவ்வாறு பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கொள்கை திட்டமிடல் அமைச்சுக்கான நிதியொதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அஷ்ரப் திட்டமிடல் அமைச்சு வெளியிட்டுள்ள நூலொன்றில் இலங்கை மாகாணங்களின் வரைபடம் என்ற தலைப்பின் கீழ் 8 மாகாணங்களே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நூல்1994 வரையான திட்டங்கள் தொடர்பானதாகும். முதலாவதாக வடக்கு-கிழக்கு மாகாணமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கத்தின் திட்டமிடல் பிரிவு அத்திபாரமின்றி மாளிகையைக் கட்டமுனையும் பேர்வழிகளைக் கொண்ட ஒரு குழுவாகவே எனக்கு தோன்றுகிறது. மாகாண சபைகள் கோட்பாட்டை அரசாங்கம் சரியாக விளங்கிக் கொள்ள வில்லை.

மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாகாணசபைகளை மத்திய அரசின் அதிகாரங்களை பன் முகப்படுத்துவதற்கான ஒரு கருவியாகவே இப்போது பயன்படுத்துகிறார்கள்.

உண்மையில், மாகாணசபைகள் அந்தந்த மாகாணங்களில் மக்கள் அரசியல் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்கான ஏற்பாடுகளேயாகும். அதிகாரப் பரவலாக்கத்துக்கும் பன்முகப்படுத்தலுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அரசாங்க உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அஷ்ரப் தமதுரையில் கூறினார்.

# உழைக்கும் மக்களை உருக்குலைக்கும் வரவுசெலவு திட்டம். EPRLF

ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ளசகலரும் வரவு செலவு திட்டத்தை வன்மையாக எதிர்க்க வேண்டும் என ஈ.பி.ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் தோழர் க. பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது-1991இன் வரவு செலவுத் திட்டம் போசாக்குடன் வளர வேண்டிய பொதுத்துறையை மக்கள் மயமாக்குதல் என்ற போர்வையில் அப்பட்டமானமுறையில் தனியார் மயப்படுத்தி நாசமாக்குவதற்கு வழிவகுக்கும் ஒரு திட்டமாகும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த காரணிகளுக்கு அரசு உதவி நிறுத்தியோ அல்லது சிதைத்தோ பொதுவான சமானியர்கள் பயன் பெறும் பகுதிகளை தனியாருக்கு தாரை வார்க்கும் இந்த அரசின் வழக்கமான நடைமுறையை உறுதி செய்யும் இந்தவரவு செலவுத்திட்டம் தேசத்தின் நிதித்துறையில் வெளிநாட்டு ஆதிக்கத்தையும் உறுதிப்படுத்துகின்றது.
திறந்த கதவுப் பொருளாதார கொள்கைமூலம் முழு இலங்கையின் ஒரு வெளிநாட்டுப்பொருட்களின் சந்தையாக்கி தேசிய பொருள் உற்பத்தித்துறையில் தொழிற்துறையை பலவீனப்படுத்தும் இந்த அரசின் கொள்கையை இந்த வரவு செலவுத்திட்டம் தெளிவாக தொடருகின்றது. எமது கண்களை மூடிக்கொண்டு எமது முழு எதிர்காலத்தையும் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் இந்த பொருளாதாரக் கொள்கை நிச்சயமாக பணவீக்கத்தினை அதிகரித்து வாழ்க்கைச் செலவை உயர்த்தி ஏழை உழைக்கும் மக்களை மிக மோசமாக பாதிக்கும்.
ஏற்கனவே பல காரணங்களுக்காக பல பொருட்களின் விலையை கூட்டி வரவு செலவுத்திட்டத்திலிருந்து மக்களின் கோபாவேசத்தை திசை திருப்பிய இந்தஅரசு சீரழிவைக் கொண்டுவரும் இந்நிதிக்கொள்கையை மாற்றுவதற்கு வழியில்லாமல் திண்டாடுவது இந்த வரவு-செலவுத்திட்டத்தில் தெரிகிறது.

# மட்டக்களப்பில் அகதிகளின் குடிநீர் பிரச்சனையை தீர்க்கவும். EPRLF அறிக்கை

மட்டக்களப்பு நகரில் இருக்கும் அகதிகளுக்கு குடிநீர்இல்லை. குறைந்த பட்சம் இரண்டு பவுசர்களாவது உடனடியாக தேவையாகவுள்ளது. மாநகரசபைக்கு இதை கொடுத்து உதவுவதன் மூலம் குடிநீர் பிரச்சினையை ஓரளவாவது தீர்க்க முடியும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தகவல் திணைக்களம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது-

மட்டக்களப்பு மாவட்டத்தில் 53 அகதி முகாம்களில் 22,414 குடும்பங்களைச் சேர்ந்த 1,02,697பேர் அகதிகளாக தங்கியுள்ளனர். இவை தவிர ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது உற்றார் உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு வாராந்தம் 1000 மெ. தொன் உலர் உணவு தேவையாக உள்ளது. யூன் 11இல் இருந்து இன்று வரையுள்ள 16வாரங்களுக்கு பதிலாக 3வாரத்திற்கான உலர் உணவுப் பொருட்களே கொடுக்கப்பட்டுள்ளது. சகல முகாம்களிலும் சுகாதார சீர்கேடு தொடர்ந்த வண்ணம் உள்ளது. இவை தவிர பாவனைக்குரிய பாத்திரங்களோ, பாய்களோ முற்றாக இல்லை. பெரும் பான்மையான மக்களுக்கு மாற்று உடுப்புக்கள் கிடையாது. மேற்கண்டவாறே அகதிமுகாம்கள் இயங்கி வருகின்றன.

தனிப்பட்டவர்களின் வீடுகளில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு இதுவரை எதுவித உதவியும் கிடைக்க வில்லை. மட்டக்களப்பு நகரத்தில் ஏறத்தாழ 700குடும்பங்கள் இவ்வாறான நிலையில் உள்ளன. இவர்களுக்கும் ஏனையோரைப் போன்றே உடனடியாக உதவிகள் தேவையாக உள்ளது.

இவைதவிர வந்தாறுமூலை, சித்தாண்டி கோவில், கோரக்கல்லிமடு ஆகிய கிராமங்களில் உள்ள அகதி முகாம்களில் இருந்து அகதிகள் புலிகளால் வெளியேற்றப்பட்டுள்ளனர். வெளியேற மறுத்த பொது மக்களை புலிகள் கொடுமையான முறையில் தண்டித்தும் உள்ளனர். இவர்கள் பல் வேறுபட்ட துன்பங்களுக்கு மத்தியில் காடுகளில் சீவிக்கும் கட்டாயம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இம்மக்களை வரவழைத்து பாதுகாப்பு கொடுக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடமையாகும். அகதி முகாம்கள் நிர்வகிக்கும் அதிகாரிகள் மத்தியில் மோசமான ஊழல், துஷ்பிரயோகம் போன்றவை தலைதூக்கியுள்ளது. பொதுமக்களுக்கு விநியோகிக்க வேண்டிய பொருட்களில் கணிசமான தொகையை இவர்கள் அபகரிக்கின்றனர். இதேபோல் இன்னொரு பகுதி பொருட்கள் புலிகள் அபகரிக்கின்றனர்
இவற்றைஇல்லாமல்செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும் அகதிகளாக இருக்கும் பலர் இக்குற்றச்சாட்டை வைக்கின்றனர்.

அரசாங்க செயலக புள்ளி விபரப்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 6000 வீடுகள் சேதமாக்கப் பட்டுள்ளனர், 4000 வீடுகள் சூறையாடப் பட்டுள்ளன, 600 தமிழ் மக்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர், ஏறக் குறைய 1200 பேர் காணாமல் போயுள்ளனர். ஆனால் இந்த புள்ளி விபரம் இன்னும் அதிகமாக இருக்கும் என்று அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் எத்தனை பேர் கைது செய்யப் பட்டார்கள் எங்கு வைக்கப் பட்டுள்ளார்கள்என்பதனை அறிவதன் மூலம் மக்கள் தமது உற்றார் உறவினர் தலைவிதியையாவது தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்

# மட்டக்களப்பில் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதில் தாமதம்.

**ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் கண்டனம்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிகளுக்கு வழங்க வென அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் மட்டக்களப்பு கச்சேரி நிர்வாகத்திலிருக்கும் களஞ்சியத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அரச ஊழியர்களின் அசமந்தப் போக்கே இதற்குக் காரணம் என ஈ.பி. ஆர். எல். எவ். யாழ் மா வட்ட எம். பி. தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -
தேங்கிக் கிடக்கும் பொருட்களில் குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டியவிட்டாமில்க்-795ரின், லக்ஸ்பிறே-1019பக்கட், டென்ட்-11, குடும்பத்திற்குரியபொதிகள்-650, சமையல் பாத்திரங்கள்-375, பெரிய சோஸ்பன்-12, கர்ப்பிணி தாய்மார்களுக்கான திரிபோஷ 875பக்கட், பயறு-1975கிலோ, பருப்பு-2000கிலோ, பெட்சீட்-100, பிஸ்கட்-25பெட்டி, தும்புத்தடி-25 என்பன அடங்குகின்றன. ஏற்கனவே பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சீரான முறையில் நிவாரணம் கிடைக்காத நிலையில் இவ்வாறு நிவாரணப் பொருட்கள் மக்களைசென்றடையாமல் தேங்கிக் கிடப்பது மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் என்பதைப் புரிந்து கொண்டு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் தாமதமின்றிஅரச அதிகாரிகளை இந்நிவாரணப் பொருட்களை வழங்க பணிப்புரைவழங்கி இவர்களுக்கு இப் பொருட்களை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இச் சந்தர்ப்பத்தில் இம் மாவட்டத்தில் இன்னுமொரு குறைபாட்டையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. கொழும்பிலிருந்து வாழைச்சேனை வரை மட்டுமே மட்டக்களப்புக்கான ரயில் சேவை நடத்தப்படுகிறது. வாழைச்சேனையில் வந்திறங்கும் பயணிகளுக்கு மட்டக்களப்பு செல்வதற்காக ஒரு பஸ் வண்டியே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. ரயிலில் பயணம் செய்யும் மக்களுக்குப் இப் பஸ்சேவை போதாது. இதனையும் முக்கிய பிரச்சினையாக கருத்திற் கொண்டு கிழக்குப்பிராந்திய போக்கு வரத்துச்சபை மேலதிகமாக இன்னும் இரு பஸ் வண்டிகளையாவது சேவையில் ஈடு படுத்தி பயணிகளின் வாழைச்சேனை-மட்டக்களப்பு பிரயாண ஒழுங்கை சீர்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

# மட்டு அகதிகளை கட்சிகளின் பிரதிநிதிகள் நேரில் சந்தித்தனர்

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்த அகதிகளின் நிலைமையை ஆராய வந்திருந்த அரசியல் கட்சிகளது பிரதிநிதிகள் மட்டக்களப்புக்கு வருகை தந்தனர் இவர்கள் ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை, புனித சிசிலியா பெண்கள் பாடசாலை ஆகிய அகதி முகாம்களுக்குச் சென்று மக்களது நிலைமையை கேட்டறிந்தனர். குழுவினர் கச்சேரியில் இடம் பெற்ற மாநாட்டிலும் பங்கு பற்றினர்.

அரச அதிபர் ஆர். யோகநாதன் தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் ஜோசப் எம்.பி, கே. கருணாகரன் எம். பி, அப்துல்லா எம்.பி, ஈ.என். டி. எல். எவ். பிரதிநிதி ராமராஜ், ஈ. பி. டி. பி. சார்பில் வடிவேல் செல்வம், ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் தட்சணாமூர்த்தி, புளொட் சார்பில் செல்வா, ஆர். டி. சிங்கம், லங்கா சம சமாஜக் கட்சி சார்பில் அமின், நவ சம சமாஜக் கட்சி சார்பில் சிவகுமார், ஐ. தொ. கா சார்பில் குழந்தைவேலு, சிறிலங்கா மக்கள் கட்சி சார்பில் இஸட், முஸ்லிம் தேசிய அசெம்பிளி சார்பில் சாகிர்மௌலானா ஆகியோருடன் இணைப்பதிகாரி செனவிரட்னவும் கலந்து கொண்டார்.

www.padippakam.com



# காங்கேசன்துறை சீமெந்து ஆலையை மீண்டும் இயங்க வையுங்கள்

### சபையில் நவரத்தினம் எம்.பி.கோரிக்கை.

செயலிழந்துள்ள பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம், காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை ஆகியவற்றை மீண்டும் இயங்கச் செய்ய அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ் மாவட்ட ஈ. பி. ஆர். எல். எவ். எம். பி-. நவரத்தினம் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

மாகாணங்களிலுள்ள மூலப் பொருட்களைப் பாவித்து கைத்தொழில் உற்பத்திகளை மேற் கொள்ளக் கூடிய தொழிற்சாலை களை உருவாக்கும் அதிகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கைத்தொழில் .மேம்படுத்தல் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு மீது பேசிய அவர் மேலும் கூறியதாவது.

தேசியரீதியாகவே நாம் சிந்திக்க வேண்டும். கைத்தொழில் திட்டங்களையும் தயாரிக்கவேண்டும். புதிதாக தொழிற்சாலைகளை உருவாக்க திட்டமிடும்போது ஏற்கனவே செயற்படும் தொழிற்சாலைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது அவசியம்.

## தரைமட்டம்

பரந்தனில் இயங்கிய இரசாயன தொழிற்சாலை இப்போது தரைமட்டமாகி விட்டது. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை யில் உற்பத்தியை தொடரமுடியாத நிலை.இதனால் குறித்த உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படியிருக்க கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யமுடியுமா? மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை கொடுத்தால் மாகாணரீதியில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம். அந்தந்த மாகாணத்தில் உள்ள மூலப்பொருட்களைப்பாவித்து தொழிற்சாலைகளை அவை நடத்தலாம்.

## நிர்வாக இயக்கம்.

வடக்கு கிழக்கில் மாகாணசபை இயங்காத போதும் வட-கிழக்கு நிர்வாகம் இயங்குகிறது.

மாகாணசபைகளுக்கு அதிகாரத்தை கொடுக்கவேண்டும். எந்நாளும் குழந்தையை குழந்தையாக வைத்திருக்கமுடியாது. வளரும் குழந்தைக்கு பாலூட்ட வேண்டும்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் ஏற்றுமதி உரிய முறையில் நடத்தப் படுவதில்லை.எனவே முதலாளிமாரையும்,உற்பத்தித் தொழிற்சாலைகளையும் கண்காணிக்கவேண்டும்.

அரசியல் ரீதியில் சிந்திக்காது. உற்பத்தியை அதிகரிக்க முற்படவேண்டும். தனியார் துறைக்கு ஊக்கமளித்து விட்டு கூட்டுதாபனங்களை அழிக்க முற்படக்கூடாது.

வடக்குகிழக்கில் இன்று எந்த கைத்தொழில்களும் இயங்குவதில்லை. சுருட்டு உற்பத்தி பீடிஇலை உற்பத்தி ஆகியனவும் பாதிக்கப்பட்டுள்ளன. முன்பெல்லாம் வடஇலங்கையிலிருந்து நூற்றுக்கணக்கான லொறிகளில் சுருட்டுக்கள் வந்தன. இன்று வடக்கிலேயே சுருட்டு பீடிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

எல்லாப்பகுதியிலுமுள்ள தொழிற்சாலைகளையும் அரசு பாதுகாக்க வேண்டும். ஏழுமாகாணங்களுக்கு மட்டும் தொழிற்சாலைகளை அமைக்கக் கூடாது. வடக்குக்கிழக்குக்கும் பாரிய தொழிற்சாலைகள் அவசியம். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை எப்போது உற்பத்தியை ஆரம்பிக்குமோ தெரியாது

இவற்றுக்காக அரசைமட்டும் நான் குற்றம் சுமத்த வில்லை வன்முறையால் பலநிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன நாட்டில் வன்முறை நீடிக்கும்வரை உற்பத்திகளை அபிவிருத்தி செய்யமுடியாது.

வட-கிழக்கில் விவசாயம், மீன்பிடி, ஐஸ்தொழிற்சாலை ஆகியனவும் பாதிக்கப்பட்டுள்ளன. ஐஸ் இல்லாததால் மன்னார் மீனவர்களால் மீன்பிடிக்க முடியாதுள்ளது. யாழ்குடாநாட்டில் சிறுசிறுதொழில்களும் நடப்பதில்லை. வன்முறையைகாட்டி கைத்தொழில்களை ஒதுக்கிவிட முடியாது.

# திருக்கோவிலில் அகதிகள் மழையினால் பெரும் கஷ்டம்..

திருக் கோவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாடசாலைக் கட்டிடங்களில் தங்கியிருக்கும் அகதிகள் தற்போது பெய்து வரும் மாரி மழையினால் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

கட்டிடங்களில் நெரிசல் ஏற்பட்டிருப்பது ஒரு புறமிருக்க சமையல் செய்வதற்கு விறகுமின்றி இடமுமின்றி அவர்கள் திண்டாடுகின்றனர். அரச நிவாரண உதவிகள் போதாமல் இருப்பதாலும் வெளியிடங்களுக்குச் சென்று ஏதாவது தொழிலை செய்ய முடியாமலிருப்பதாலும் இந்த மக்களுக்கு பெரும் பணக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

சுகாதார வசதிகள் இல்லாத காரணத்தினால் வயிற்றோட்ட நோய் அகதி முகாமில் மட்டுமின்றி கிராமங்களிலும் பரவியுள்ளது. உரிய சிகிச்சை கிடைக்காததனால் அண்மையில் திருக்கோவில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குழந்தை ஒன்று உயிரிழந்தது.

தொடர்ந்து மழை பெய்து கொண்டு வருவதனால் திருக்கோவில் பகுதியிலுள்ள அகதிகளை வசதியான வேறிடங்களுக்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இப்பகுதியிலுள்ள பாடசாலைகள் தொடர்ந்து செயல் படாமல் உள்ளன. அகதிகள் பாடசாலைகளை விட்டு வெளியேறிய பின்னர்தான் வகுப்புகளை ஆரம்பிப்பது சாத்தியம் என அதிபர்கள் தெரிவிக்கின்றனர். அம்பாறை மாவட்டத்தில் 31 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 6 தமிழ் பாடசாலைகள் உள்ள பிரதேசங்களில் மக்கள் இல்லை.30 பாடசாலைகளில் அகதிகள் தங்கியுள்ளனர்.

இங்குள்ள பொது மக்களில் ஆண்களை அகதி முகாம்களிலும் பெண்களை இராணுவ முகாம்களிலும் அதிகமாக காணக் கூடியதாக உள்ளது.

காணாமல் போனோரையும் கைது செய்யப்பட்டோரையும் மீட்டுத் தருமாறு கேட்பதற்காகவே பெண்கள் பலர் படைமுகாம் வாசல்களில் காத்துக்கிடக்கின்றனர்.

# அகதிகளான முஸ்லீம் மக்களை சொந்த இடங்களிலேயே குடியமர்த்த வேண்டும்.

### ஈ.பி.ஆர்.எல்.எவ். யாழ் எம்.பி வலியுறுத்து.

வடக்கிலே சகோதரர்கள் போல் எங்களுடன் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் இன்று அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். நிலைமை இவ்வாறே போனால் வடக்கில் தமிழர்களும் வாழ முடியாத சூழ்நிலை உருவாகும் என யாழ்ப்பாண மாவட்ட ஈ.பி.ஆர்.எல். எவ்-எம். பி. நவரத்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மொத்த விற்பனை வரி (திருத்தம்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நவரத்தினம், வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேறுவதை தடுத்து, அவர்களுக்கு அங்கேயே பாதுகாப்பு வழங்கி குடியமர்த்த வேண்டும். அல்லா விட்டால் பாதுகாப்பில்லாத சூழ் நிலையில் தமிழர்களும் அங்கிருந்து வெளியேறுவர் என்றும் சுட்டிக் காட்டினார்.

# மட்டு ஆசிரியர்களுக்கும் இடைக்கால அலவன்ஸ் வேண்டும். EPRLF கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப் படுவது போன்று மட்டக்களப்பு நகரில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும் இடர் கால அலவன்ஸ் வழங்கப்பட வேண்டுமென்று ஈ. பி. ஆர். எல். எவ். அரசாங்கத்தை கோரியுள்ளது.

இது குறித்து ஈ.பி.ஆர். எல். எவ். விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் இடர்கால அலவன்ஸ் தற்காலிகமாக நகரிலே கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை. மட்டக்களப்பு நகரிலே பாடசாலைகள் தற்போது இயங்கி வருகின்றன. வெளியிடங்களில் கடமையாற்ற நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் போக்குவரத்துச் சீரின்மை, பாதுகாப்பு படையினரின் நடவடிக்கை ஆகியவற்றால் தங்களுக்கென நியமிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு சென்று கல்வி கற்பிக்க முடியாத நிலைமையில் உள்ளனர். இவர்களுக்கு தற்காலிக நியமனம் நகரில் உள்ள பாடசாலைகளில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இவ் ஆசிரியர்களுக்கு இடர் கால அலவன்ஸ் தமது பாடசாலைக்குச் சென்றாலே வழங்க முடியுமென மட்டக்களப்பு கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது. ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போன்று இவர்களுக்கும் இடர் கால அலவன்ஸ் வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இத்தோடு படுவான்கரை பிரதேசம் நீண்டகாலம் கல்வியில் பின்தங்கிய பிரதேசமாக இருந்துள்ளது. மட்டக்களப்பு, கருவாஞ்சிக்குடி, வாழைச்சேனை ஆகிய கல்விக் கோட்டத்துக்குள்ளே இப் பாடசாலைகள் இயங்கி வந்தன. இப்பிரதேச கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள நாம் படுவான்கரை பிரதேசத்திற்கென தனி கல்விக் கோட்டம் ஆரம்பிக்கப் பட வேண்டுமென இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறோம்.

# கொழும்பில் தெருவோரங்களில் வாழும் அகதிகள்.

புத்தளத்திலிருந்து கொழும்புக்கு வந்த யாழ்ப்பாண அகதிகள் பலர் பெரும் அலைச்சலுடன் பசியாலும் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து அகதிகளாக புத்தளத்துக்கு வந்தோரில் 70 குடும்பத்தினர் போதிய வசதிகளுடன் தங்க முடியாமல் போனதால் கொழும்புக்கு வந்தனர். முதலில் மாளிகாவத்தைக்குச் சென்ற இவர்கள் அங்குள்ள முகாமில் தங்க முடியாமல் போனதால் வெள்ளவத்தைக்கு கூட்டிச் செல்லப்பட்டனர் அங்கும் இவர்களுக்கு இடம் கிடைக்க வில்லை.

பின்னர் பம்பலப்பிட்டியில் ஒரு கோயிலில் இடம்கிடைத்தது. எனினும் அங்குள்ள சூழ்நிலை இவர்களுக்கு ஒத்து வரவில்லை.இவர்களது கஷ்டத்தை அறிந்த ஒரு தமிழ் வாலிபர் தெஹிவளையிலுள்ள ஒரு தனியார் கட்டிடத்தில் இடம் தேடிக் கொடுத்துள்ளார்.

பாமிஸ் இயக்கத்துடன் இந்த வாலிபர் தொடர்பு கொண்டதை அடுத்து அகதிகள் இடம் பெயர பாமிஸ் வாகன வசதி அளித்தது.

நேற்று முன்தினம் இரவு இந்த அகதிகளை சந்தித்த போது மின்சார வசதியில்லாத பழைய கட்டிடத்தில் குப்பி விளக்கின் வெளிச்சத்தில் தங்கியிருப்பதைக் காண முடிந்தது. கருணை உள்ளம் கொண்ட ஒருவர் இவர்களுக்கு பாண் வாங்கிக் கொடுத்துள்ளார்.

வாய்க்கு ருசியாக சோறு சாப்பிட ஆசையாக இருப்பதாக அகதிகள் சிலர் கூறினர். குழந்தைகள்பலவும் தரையில் உறங்கிக் கொண்டிருந்தன. பிரசவ காலம் நெருங்கிய ஒரு பெண்ணும் கவலையுடன் காணப்பட்டார்.

"பாமிஸ்"உத்தியோகஸ்தர்கள் இவர்களது குறைகளை நேரில் அறிந்து இயன்ற உதவிகளைப் புரிவதில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தையல் தொழில் புரிந்த பலரின் குடும்பங்கள் இந்த அகதிகள் மத்தியில் உள்ளன.

புத்தளத்தில் வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட்டதால் கொழும்புக்கு வந்தோம். இங்கும் அலைக்கழிக்கப் பட்டோம், பசியாலும் வாட நேரிட்டது இருட்டில் இரவைக் கழிக்கும் நிலையும் உருவாகியுள்ளது என அகதிகள் வாய்விட்டு கூறி வேதனைப்பட்டனர்.

# ஜனநாயக சக்திகள் குரல் கொடுக்க வேண்டும்

### ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம்.

கட்டாய வெளியேற்றத்தின் மூலம் தமிழ் பேசும் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியேறும் நிலையைச் சீர்குலைக்கும் புலிகளின் மக்கள் விரோத நிலைப்பாட்டை கண்டிப்பதாக ஈ.பி. ஆர்.. எல். எவ். செயலாளர் நாயகம் தோழர் க. பிரேமச்சந்திரன் எம். பி. அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இதனைக் கண்டும் காணாது பாராமுகமாக இருக்கும் அரசின் நடவடிக்கைக்கு எதிராக ஜனநாயக சக்திகள் குரல் கொடுக்க வேண்டுமெனவும் அவர் அறிக்கையில் கேட்டுள்ளார்.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது -

இப்போது நடைபெறும் யுத்தம் தமிழ் மக்களை சொந்த நலனுக்காக பாவிக்கின்ற நிலைமைக்கு கொண்டு செல்கின்றது என்பதை இச்சம்பவங்கள் நிரூபிக்கின்றன.மக்கள் இல்லாத மண்ணை ஆள நினைப்பவர்கள் காலம் கடந்தாவது உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் பேசும் மக்கள் முஸ்லிம் ஊர் காவல் படையாலும் இராணுவத்தாலும் மறுபுறம் புலிகளாலும் இருபக்க நெருக்குதலுக்குள்ளாகி சிக்கி தவிக்கின்றனர்.

வந்தாறுமூலை பல்கலைக்கழக அகதி முகாம், சித்தாண்டி முருகன் ஆலயம், கிரான் ஆச்சிரமம், கோரக்கல்லிமடு பாடசாலை ஆகியவற்றில் தங்கியிருந்த அகதிகளும் புலிகளால் முற்றாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.15,000குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 60,000பேர் இந்நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

வேதனையின் விளிம்பில் நடமாடும் மக்களை விரத்தியான நிலைக்கு தள்ளி விடும் இத்தகைய நிலைமைகள் தொடராதிருக்க மக்களை முகாம்களில் வைத்து பராமரிக்க உடனடியாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். இல்லையேல் உடைமைகளை இழந்த அகதி வாழ்க்கைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் உயிரிழப்பிற்கு உள்ளாவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.இன்று மக்களின் எதிர் பார்ப்பு மோதல்கள் தொடர்வதை விரும்பவில்லை. அத்தகைய நிலைமையை தோற்றுவித்தவர்கள் மீது கடுமையாக அதிருப்தி அடைந்துள்ளனர். இந்நிலைமையில் மக்களை பணயக் கைதிகளாக பாவிக்கவே புலிகள் ஈவிரக்கமற்ற செயலை செய்துள்ளனர்.

"நாம் மக்களில்லாத மண்ணை நேசிக்கவில்லை
**** மக்களுக்காகவே மண்ணை நேசிக்கிறோம். ****

தோழர்.க.பத்மநாபா.

படிப்பகம்

www.padippakam.com



# வடக்கு கிழக்கில் மக்களைக் காக்க நடவடிக்கை தேவை

வட-கிழக்கில் சகல மக்களினதும் உயிர்களும் உடைமைகளும் பாதுகாக்கப்படுவதற்கு இந்த அரசு சகலவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இது ஒன்றே தமிழ் மக்களை எல்.ரி.ரி.ஈ. இடமிருந்து அன்னியப்படுத்தும். இப்படி நடக்காத வரை பிரச்சினைகள் தீரா என வன்னி மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எப்- தோழர்- இராஜா குணேஸ்வரன். எம்.பி. பாராளுமன்றத்தில் கூறினார்.

தற்போதைய மாகாணசபைகளைப் பலப்படுத்தி கூடிய அதிகாரங்களை கொடுத்து நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியை ஆரம்பிக்காத வரை பிரச்சினைகள் தீராது என்றும் அவர் எச்சரித்தார்.

அவர் மேலும் கூறியதாவது-

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரான நாம் 1987யூலை மாதத்தின் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதிலிருந்து இந்த நாட்டில் தேசிய ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்ட நாம் தமிழ் பிரதேசங்களிலே வேரூன்றி இருக்கும் ஒரு தேசிய அரசியல் கட்சி என்பதை மிகவும் ஆணித்தரமாக இந்த சபையில் சொல்லி வைக்க விரும்புகின்றோம். எமது கடந்த இரண்டு வருட அனுபவங்களும், அரசியலும் இன்று தோன்றியிருக்கும் பிரச்சினைகளை முன்கூட்டியே இன்று தோன்றியிருக்கும் விதத்தில் தான் சிக்கலடையும் என்று நாம் இந்த நாட்டில் இருக்கும் சகல அரசியல் கட்சிகளையும் எச்சரித்தோம். இந்த பிரச்சினைகளை தீர்த்து வைக்க உதவுமாறு சென்ற வருடம் சகல அரசியல் கட்சிகளுடனும் தொடர்பு கொண்டோம். எம்மை தமிழ் பிரதேசத்தின் தமிழ் கட்சி என்று கருதிக் கொண்டு நாம் சொன்னதை நிராகரித்த இந்த அரசியல் கட்சிகள் சிங்கள இனத்துவேசத்தின் ஆக்கிரோசத்திற்கு பயந்துகொண்டு நாம் சொன்னவற்றை செவிமடுக்க தயாராக இருக்க வில்லை.

ஆயுதங்களை கீழே வைத்து விட்டு ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை வட-கிழக்கு மாகாணத்தில் இஸ்திரமான ஒரு பிரதேச சுயாட்சியை ஏற்படுத்துவதற்காக மாகாண சபை முறையை ஏற்றுக் கொண்ட நாம் அந்த முறையை வளர்ப்பதற்கு எத்தனித்த நாம் அதாவது தேசிய ஐக்கியத்தையும், ஜனநாயகத்தையும் ஏற்றுக் கொண்ட நாம் இன்று தோன்றியிருக்கும் சிக்கலான நிலைமைகள் இப்படித்தான் நெருக்கடியாக மாறும் என்பதை முன்கூட்டியே கூறிய நாம் தேசிய ஐக்கியத்தை அந்தரங்க சுத்தியாக ஏற்றுக்கொள்ளாத ஜனநாயக வாழ்வு முறைக்கு வருவதாக கபட நாடகம் நடித்த எல்.ரி.ரி.ஈ.உடன் ஐக்கிய தேசிய கட்சி அரசு பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்த போது இப் பேச்சு வார்த்தைகள் தோல்வியில் முடியும், எல்.ரி.ரி ஈ.யின் பயங்கரவாதம் சக்தி பெற்று வலுவடையும், இந்த நாட்டின் வடக்கு-கிழக்கிலே சகல இன மக்களினதும் உயிர்கள் பலியாக்கப்பட்டு இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடும் என தமிழ் பிரதேசங்களில் வேரூன்றி இருக்கும் நாம், முன் கூட்டியே விடுத்த எச்சரிக்கைகளை இந்த சபையின் இரு பக்கங்களில் இருக்கும் சிங்கள பிரதேசத்தில் வேரூன்றி இருக்கும் தேசிய கட்சிகள் கணக்கில் எடுக்காததே இதற்கு மூலகாரணம். நாங்கள் இந்த சபையில் மிகவும் தெளிவாக ஒன்றை கூறி வைக்க விரும்புகின்றோம். சகல பக்கங்களிலிருந்து கிளம்பி வந்த எச்சரிக்கைகளை எல்லாம் உதாசீனம் செய்து விட்டு எல்.ரி. ரி. ஈ வடக்கு-கிழக்கிலே வாழும் சகல இனங்களைச் சேர்ந்த மக்களையும், ஜனநாயக அரசியல் கட்சிகளையும் ஒழித்துக்கட்டிக் கொண்டிருக்கும் போது கோடிக்கணக்கிலே மக்களிடமிருந்து கப்பம் வாங்கி துன்புறுத்தியபோதும், நிர்வாகங்கள் நீதிமன்றங்கள் போன்ற ஜனநாயக ஸ்தாபனங்களை செயல் இழக்க செய்த போதும், காடுகள் மற்றும் தேசியசெல்வங்கள் எல்.ரி. ரி. ஈயால் கண்மூடித்தனமாக சூறையாடப்பட்ட போது எல்.ரி.ரி.ஈயைக் கண்டிக்காது, தண்டிக்காது நடந்து கொண்டது மட்டுமல்லாது எல் ரி.ரி.ஈ.தனது பயங்கர வாத பிடியை மக்கள் மீது இறுக்குவதற்கு இந்த அரசே நேரடியாகவும் மறைமுகமாகவும் இருந்ததால் இன்று நடந்து இருக்கும் சகல நிலைமைகளுக்கும் முழுப் பொறுப்பும் வகிக்க வேண்டும்.

இலங்கையின் வரலாற்றிலேயே நாம் அனைவரும் போற்றி பாது காத்து வந்த ஜனநாயக பாரம்பரியங்களும் ஏறத்தாழ கடந்த 1,1/2தசாப்தங்களுக்கு மேலுமாக கொச்சை ஆக்கப் பட்டது போல் வேறெங்கும் காணமுடியாது. பிரச்சினைகளின் சகல விதமான சிக்கல்களையும், நெருக்கடிகளையும் கூறினால் மட்டும் போதாது. அதன் தீர்வுகளுக்கான வழிமுறைகளையும் தமிழ் பிரதேசத்திலே வேரூன்றி இருக்கும் தமிழ் கட்சி என்ற ரீதியிலும் உலகளாவிய ரீதியில் மிக வேகமாக உறுதி பெற்று வரும் சகலதுமான முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் நெருங்கிய தொடர்புடைய கட்சி என்ற ரீதியிலும் நாம் இந்த தீர்வுகளை வலியுறுத்த விரும்புகின்றோம். இந்த அரசு தற்போது நடந்து கொண்டிருக்கும் யுத்தம் புலிகளுக்கு மட்டும் தான் எதிரானது தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்று எப்படிக் கூறினாலும் இந்த யுத்தத்தின் காரணமாய் மிகக் கூடுதலாக ஆயிரக் கணக்கிலே மக்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இப்படிக் கொலை செய்யப்பட்டவர்களில் கணிசமான அளவினர் சட்ட வரம்புகளை மீறிய கொலைகளுக்கு உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள். ஆயுதப்படையும் மற்றைய இனங்களைச் சேர்ந்த வெறியர்களும் இதை நடத்தியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது

அப்பாவி சிங்கள மக்களையும் ஒரு பாவமும் அறியாத முஸ்லிம் மக்களையும், குழந்தைகள், பெண்கள் உட்பட சகலரையும் கொன்று குவிக்கின்ற எல். ரி. ரி. ஈயை காட்டுமிராண்டித்தனமான, அநாகரிக இரத்த வெறிபிடித்த மனித உருவில் இருக்கும் மிருக கும்பல் என சந்தேகத்திற்கு இடமின்றியே வார்த்தைகளால் சம்பவங்கள் நடந்தவுடன் கண்டிக்க தயங்காத நாம் மேற் கண்டவாறு தமிழ் மக்களை கொன்று குவிக்கின்ற சக்திகளை யாரும் கண்டிக்க முன்வராததை மட்டுமல்ல அந்த சம்பவங்களை இருட்டடிப்பு செய்வதிலேயே இந்த நாட்டில் சிங்களவர் கையில் இருக்கும் தேசிய பத்திரிகைகளும், சிங்கள பிரதேசங்களில் வேரூன்றியிருக்கும் தேசிய கட்சிகளும் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன என்று குற்றம் சாட்டக் கூடிய துரதிஷ்ட நிலைக்கு நான் தள்ளப்பட்டிருக்கிறேன்.

## வடபகுதிக்கு ஆறுவாரத்திற்கு ஒருமுறை ஐயாயிரம் புதிய இராணுவம்

ஈழப்புலிகளை எதிர்த்து போரிட்டு வரும் இராணுவத்துருப்புகளை வலுப்படுத்தும் வகையில் ஆறு வாரத்துக்கு ஒருமுறை 5,000 வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வடபகுதிக்கு அனுப்பப்படுவதாக இலங்கை பாது காப்புத் துறை இணை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின தெரிவித்தார். இலங்கையில் ஆளும் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அவர் பேசினார்.

இராணுவத்தினருக்குப் போதிய ஆயுதங்கள், வெடிபொருட்கள் இல்லாத நிலை இருப்பதாக எதிர் கட்சிகள் கூறிவரும் புகாரை அவர் மறுத்தார். பாதுகாப்புச் செலவுகளுக்காக 100 கோடி ரூபாய், அதாவது தேசிய பட்ஜெட்டில் 18சதம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஈழப்புலிகளுடன் நடந்து வரும் சண்டையில், இதுவரை சுமார் 450 வீரர்கள் மடிந்துள்ளனர், 1200வீரர்கள் காயமடைந்துள்ளனர். என்று அவர் சொன்னார். ஏது மறியாத மக்களுக்கு எந்த விதத் துன்பமும் இல்லாமல், ஈழப்புலிகளை ஒழிக்க வேண்டும் என்றார் அவர். யாழ்ப்பாணத்தை தரை மட்டமாக்கி விடமுடியும், ஆனால் ஏராளமான அப்பாவி மக்களைக் கொல்ல வேண்டியதிருக்கும், அரசின் நோக்கம் இதுவல்ல. மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

வட பகுதி பிடிபட்டதும் அதைத் தொடர்ந்து காப்பாற்றவும் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் கூடுதல் துருப்புகள் தேவைப்படும் என்று அவர் சொன்னார். வட பகுதியிலிருந்து ஈழப்புலிகளை அப்புறப்படுத்துவதற்குச் சிறிது காலம் பிடிக்கும் என்றார் அவர்.

இதற்கிடையில் அமைச்சர்கள், எம். பி. களாக இருப்பவர்கள் வேறு தொழில் வர்த்தகம் எதிலும் ஈடுபடக் கூடாது என்று அதிபர் பிரேமதாச எச்சரித்துள்ளார். தொழிலா, அரசியலா என்பதை அவர்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். தொழில்-வர்த்தகத்தில் ஈடுபட நினைப்போர் ராஜினாமா செய்து விடவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## கைத்தொழில் ஆணைக்குழு ஆலோசனை கவுன்சிலுக்கு மாகாண அரசின் நேரடி பிரதிநித்துவம் தேவை

உத்தேச கைத்தொழில் மயமாக்கல் ஆணைக்குழுவிலும் கைத்தொழில் ஆலோசனை கவுன்ஸிலிலும் மாகாண அரசாங்கத்தினதும் அந்த மாகாண எல்லைக்குள் அமைந்துள்ள தனியார் துறையினரதும் நேரடி பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென யாழ் மாவட்ட ஈ.பி.ஆர்.எல். எவ்-தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரன் எம். பி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

கைத்தொழல் மேம்படுத்தல் சட்டமூலத்தின் இரண்டாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தோழர் பிரேமச்சந்திரன் சமர்ப்பிக்கப் பட்டுள்ள சட்டமூலத்தின்படி மேற்கூறப்பட்ட ஆணைக்குழுவும் ஆலோசனை கவுன்ஸிலும் மத்திய அரசுக்கு பிரத்தியோகமானதாக அமைகிறது என்றும் சொன்னார்.

அரசாங்கம் இது குறித்து பரிசீலிக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால் இச்சட்டமூலமானது அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டமூலத்தையும் அதிகாரப் பரவலாக்கல் மற்றும் மாகாண சுயாட்சி ஆகியவற்றையும் அர்த்த மற்றதாக்கி விடும் என்று குறிப்பிட்ட தோழர் பிரேமச்சந்திரன் மேலும் கூறியதாவது =

உத்தேச பிராந்திய கைத் தொழில் சேவை கமிட்டியின் தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல், மாகாண சுயாட்சிக்கு குந்தகமானமுறையில் தலையீடு செய்யமுடியும்

தேசிய மட்டத்தில் கொள்கை வகுக்கும் நடைமுறை தேசிய பட்டியலுக்குரிய விவகாரமாக இருக்கின்ற அதே வேளை மாகாண முதலமைச்சரினதும் அவரது அமைச்சரவையினதும் அதிகாரங்களை எவ்வகையிலும் தளர்வு படுத்தக்கூடாது. சம்பந்தப்பட்ட மாகாணங்களிலே கைத் தொழில் மேம்படுத்தலுக்கான தேவையான கூட்டமைப்புக்களை உருவாக்கும் பொறுப்பு மாகாண அரசாங்கத்துக்கு முதன்மையான உறுதியாக இருக்க வேண்டும். ஈ. பி. ஆர். எல். எவ். தலைமையிலான வட-கிழக்கு மாகாணசபை அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த மேற் கொண்ட சகல முயற்சிகளும் அதிகாரப்பரவலாக்கலை மேலும் வலுப்படுத்த எடுத்த எத்தனங்களும் மாகாண அரசாங்கத்தை நிலைகுலைக்க புலிகள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஆதரவளித்ததன் மூலமாக அரசாங்கத்தால் திட்டமிடப்பட்ட முறையில் முறியடிக்கப் பட்டன என்பதை இங்கே குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது

## மலையக மக்களின் உரிமைகளுக்காக போராடுவோம் ஈ.பி.ஆர்.எல்.எவ்.

தமிழ் பேசும் மக்கள் மீது நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அடக்கு முறைகளுக்கும், அட்டூழியங்களுக்கும் எதிராகப் போராடும் ஈ. பி. ஆர். எல்.எவ். மலையக பாட்டாளி மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும், அனைத்து உழைக்கும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடும் என அதன் செயலாளர் நாயகம்-தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரன் எம். பி. விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது-

நவம்பர் 15ம் நாள் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்த மலையக பாட்டாளிகளின் குடியுரிமைகள் அனைத்தையும் 42ஆண்டுகளுக்கு முன் பறித்த நாள் அன்று பதவிக்கு வருவதற்காக ஒன்று சேர்ந்த இந்த நாட்டின் தமிழ், சிங்கள, முஸ்லீம் முதலாளிகளின் கட்சிகள் பாட்டாளிகளிடமிருந்து பறித்த உரிமைகளை அவர்களது கூட்டாளிகளான இந்திய வம்சாவளி தனவந்தர் களுக்கும், வியாபாரிகளுக்கும், கௌரவ பிரஜா உரிமை என்ற ரீதியில் திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்தநாட்டின் இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு, மாற்று சிந்தனை சக்திகள் எல்லாம் கடந்த நான்கு தசாப்தங்களாக நடத்திய ஒரு முனைப்பட்ட கோரிக்கைகளும், மலையக பாட்டாளிகள் நடத்திய போராட்டங்களாலுமே இந்தப் பிரஜா உரிமை இன்று அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

மலையக பாட்டாளிகள் எங்கெங்கு தொழிற்சங்க பேதங்களை மறந்து ஐக்கியப்பட்டு போராடுகிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு உரிமைகள் கிடைத்து வெற்றி பெற்றார்கள். அவர்கள் சம சம்பளம் பெற்றார்கள். அவர்கள் பிரஜா உரிமை பெற்றார்கள். ஆனால் இன்னும் அவர்கள் உழைப்பாளிகள் என்ற ரீதியில் மாதச்சம்பளத்தை வென்றெடுக்கும் அளவிற்கு அவர்களிடம் ஐக்கியம் இல்லை என்று கணிக்க வேண்டியதாக இருக்கின்றது.

மலையக பாட்டாளி மக்கள் கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாக அவர்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்களில் இருந்து பலவந்தமாக அகற்றப்படுவதையும், காணிப் பங்கீடு என்ற பெயரில் அவர்களுடைய வாழ்விடங்கள் கொள்ளையடிக்கப் படுவதையும் வன்மையாக கண்டிக்கின்றோம். பொதுத் துறைக்குப் புதிய தொழில் நுட்ப ரீதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட நிலங்களையும், தனியார் மயப்படுத்துதல் மூலம் பொதுத்துறையைப் பலவீனப்படுத்துவதை சாட்டாக வைத்து உழைக்கும் மக்களை அப்புறப்படுத்துவதற்கு எடுக்கும் அரசின் நடவடிக்கைகளையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

## யாழ் மாவட்டத்தில் உணவுக்கு பெரும் தட்டுபாடு

அண்மையில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான யுத்த நெருக்கடிகளினால் யாழ்மாவட்டத்தில் கடுமையான உணவு தட்டுபாடு நிலவுகிறது. ஒரு கொத்து அரிசி 36 ரூபாவாகவும் ஒரு போத்தல் மண்எண்ணெய் 100 ரூபாவாகவும் சவர்க்காரம் 30 ரூபாவாகவும் விற்கப் படுகிறது. கப்பல்மூலம் அண்மையில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வந்து சேராததும் தட்டுப்பாட்டுக்கு ஒரு காரணமென கூறப்படுகிறது. வேலைகள் இன்மையால் பணத்துக்கு மக்கள் கஷ்டப்படுவதால் உணவுப் பொருட்களை வாங்க முடியாமல் பலர் பட்டினியை எதிர் நோக்குகின்றனர்.

## முஸ்லீம்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் மீது தடியடிப் பிரயோகம்

வளைகுடாவலிருந்து அமெரிக்கப் படையுட்பட ஏனைய அந்நிய படைகள் வாபஸ் பெற வேண்டும் என கோஷமிட்டுக் கொண்டு ஊர்வலம் சென்ற கூட்டத்தை பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர். இதனால் பலர் சிறுகாயங்களுக்குள்ளானார்கள்.

கொழும்பு கொம்பனித் தெரு வேகந்தை பள்ளிவாசலில் தொழுகையை முடித்துக் கொண்டு வெளியேறிய முஸ்லீம்கள் ஈராக்குக்கு ஆதரவு தெரிவித்து கோஷமிடுப்பியதுடன் வீதியில் ஊர்வலமாக சென்ற வேளையிலேயே பொலிசார் தாக்கியுள்ளனர். நவசமசமாஜ கட்சியை சேர்ந்த வாசுதேவ நாணயக்கார, சுதந்திரக்கட்சியை சேர்ந்த மகிந்த ராஜபக்ஷ, மங்கள சமரவீர ஆகியோர் ஊர்வலத்தின் முன் தலைமை தாங்கி சென்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

# உண்மையான புலிகளை தப்பவிட்டு கருணாநிதி நாடகம் ஆடுகிறார்

### ஜெயலலிதா குற்றசாட்டு

வேதாரணியம் முதல் இராமேஸ்வரம் வரை தமிழகத்தின் கடலோர எல்லை பகுதிகள் இந்தியாவின் கட்டுபாட்டில் இல்லை. மத்திய அரசை ஏமாற்ற முதல்வர் கண்துடைப்பு நாடகம் நடாத்தி வருகிறார். உண்மையான புலிகளை தப்பவிட்டுவிட்டார் என்று கருணாநிதி மீது ஜெயலலிதா குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என ஜெயலலிதா சொல்லியிருக்கிறார் என கருணாநிதி தெரிவித்திருப்பதை மறுத்து அறிக்கை விட்டுள்ள ஜெயலலிதா மேலும் தெரிவித்திருப்பதாவது.

தான் செய்யும் தவறுகளை மறைக்க கருணாநிதி என் பெயரை இழுத்து விட்டு தான் தப்பிக்க பார்க்கிறார். இலங்கைதமிழர்களின் உரிமைகளுக்காக போராடி வரும் அனைத்து போராளிகளுக்கும் தார்மீக ஆதரவும் நிதியுதவியும் அளிக்க வேண்டும் என்று தான் கூறினேன். அகதிகளாக தமிழகம் வரும் இலங்கை தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுக்கவேண்டியது நமது கடமை என்றும் கூறினேன்.

ஆனால் தமிழகத்திற்குள் ஆயுதம் ஏந்திய போராளிகளை நுழைய விடுவதும், தமிழகத்திற்குள் ஆயுதம் ஏந்தி அவர்கள் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட சுதந்திரமாக அனுமதிப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஏற்கனவே கண்டனம் தெரிவித்திருக்கிறேன். இப்போதும் அதையே தான் வலியுறுத்துகிறேன்.

மத்திய அரசை ஏமாற்ற கருணாநிதி கண்துடைப்பு நாடகம் நடாத்திக்கொண்டிருக்கிறார். இதுவரை தமிழகத்தில் விடுதலைப்புலிகள் நடமாட்டமே இல்லை என்று பலமுறை அடித்துக் கூறிய முதல்வர் இப்போது நாள் தோறும் நூற்றுக்கணக்கில் விடுதலைப்புலிகள் கைது என்று செய்திகள் வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்.

ஆனால் கைது செய்யப்படுபவர்கள் விடுதலைப்புலிகளே அல்ல. ஊனமுற்றவர்களையும் நோயாளிகளையும் ஏதுமறியாத மாணவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்து விட்டு, விடுதலைப்புலிகள் கைது செய்யப்படுவதாக அறிவித்துக்கொண்டிருக்கும் கருணாநிதி, உண்மையான விடுதலைப்புலிகளை தப்பவிட்டுக்கொண்டிருக்கிறார்.

இன்றுகூட வேதாரணியம் முதல் இராமேஸ்வரம் வரை தமிழகத்தின் கடலோர எல்லைபகுதிகள் தமிழ்நாட்டின் கட்டுப்பாட்டில் இல்லை. அதாவது இந்தியாவின் கட்டுப்பாட்டில் இல்லையென்பதுதான் உண்மை.

# கொழும்பில் இளைஞர்களை கைது செய்வதை நிறுத்தவும்.

### ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம்.

கொழும்பில் அப்பாவி தமிழ் இளைஞர்களை கைது செய்வதை நிறுத்துமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் தோழர் க. பிரேமச்சந்திரன். எம்.பி. அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெள்ளியன்று பத்திரிக்கை அறிக்கையில் கூறியுள்ளதாவது-

கொழும்பில் தற்போது வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்இளைஞர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

தற்போது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் புலிகளின் கட்டாய இராணுவ ஆட்சேர்ப்பில் இணைய விரும்பாதவர்களும் அகதிகள் முகாமை விட்டு புலிகள் தமிழ் மக்களைப் பலவந்தமாக வெளியேற்றிய நிலையில் வேறுவழியின்றி விரக்தியடைந்த நிலையிலுள்ள இளைஞர்களும் கொழும்பு நோக்கி வருகின்றனர்.

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளின் போது கைது செய்யப்படும் இளைஞர்கள் காணாமல் போவதாலும், உயிராபத்திலிருந்து தப்பிக்கவே கொழும்பை நோக்கி பெருமளவில் தமிழ் இளைஞர்கள் வருகின்றனர்.

இத்தகையதொரு சூழ் நிலையில் அவர்களை இச்செயல் மிகவும் வேதனைக்குள்ளாக்கவே செய்யும். எனவே கைது செய்யப் படுவோர் உடன் விசாரிக்கப்பட்டு அப்பாவிகளாக இனம்காணப்படுவோரை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு இனிமேலும் அப்பாவி தமிழ் இளைஞர்களை கைது செய்வதை நிறுத்துமாறும் கோருகின்றோம்.

கொழும்பிலுள்ள தமிழ் அகதிகள் முகாம்களுக்கு எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. இதனால்அங்குள்ள அகதிகள் அச்சம் கொண்டுள்ளனர். இதற்குரிய பாதுகாப்பை இலங்கை அரசு மேற் கொள்ள வேண்டும் என்பதோடு மிகநெருக்கடியான சூழ்நிலையில் எதிர் காலம் பற்றிய கேள்விக் குறியோடு பெரும் தொகையான தமிழ் மக்கள் கொழும்பை நோக்கி தினம் தோறும் அகதிகளாக வருவதால் இரத்மலானையில் அகதி முகாம் உடன் திறக்க நடவடிக்கை எடுக்குமாறும் அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

# இலங்கை நலனை தீர்மானிக்க இந்தியாவுக்கு உரிமை இல்லை

### இலங்கை வெளியுறவு அமைச்சர்

இலங்கைக்கு நல்லது எது கெட்டது எது என்பதை இந்தியா தீர்மானிக்கக்கூடாது. அவ்வாறு தீர்மானிக்க இந்தியாவுக்கு உரிமையில்லை என்று இலங்கை வெளிநாட்டமைச்சர் ஹேரத் தெரிவித்துள்ளார். இலங்கையில் அந்நிய சக்திகள் தலையிட மத்தியஅரசு அனுமதிக்காது என்று இந்தியநாடாளுமன்ற ஆலோசனை கமிட்டி கூட்டத்தில் பேசும்போது இந்திய வெளியுறவு அமைச்சர் வி.சி.சுக்ல கூறியதாக ஒரு செய்தி வெளியானது. இதுபற்றி கருத்து கூறும்போதே ஹேரத் இவ்வாறு கூறினார்.

இலங்கைக்குள் யாரை அனுமதிப்பது யாருடன் ஆலோசனை கலப்பது என்பது பற்றி தீர்மானிக்க வேண்டியது இலங்கையே தவிர வேறெந்த நாடுமல்ல. கடந்த காலத்தில் இந்தியா உள்படபல்வேறு நாடுகளிடம் பல்வேறு விஷயங்களில் உதவி கேட்டது அனைவரும் அறிந்ததே இவ்வாறு செய்ய எங்களுக்கு உரிமையுள்ளது. வெளியுறவுதுறைஅமைச்சர் என்ற முறையில் இதைநான் சொல்கிறேன்.

எனினும் அண்டைநாடுகளுடன் சுமுகஉறவு நிலவ அண்டை நாடுகளுக்கு எதிராக இலங்கை மண்ணில் எந்த நடவடிக்கையையும் அனுமதிக்க மாட்டோம் என்று கூறினார்.

இலங்கை சிதறுண்டு போவதை ஊக்குவிக்க மாட்டோம். இலங்கைக்கு எதிரான எந்த நடவடிக்கையையும் இந்திய மண்ணில் நடக்க அனுமதிக்கமாட்டோம். இலங்கைக்கு இனிமேல் இந்திய இராணுவம் அனுப்பப்படாது என்று சுக்ல கூறிய கருத்துக்கள் பாராட்டப்படவேண்டியது என்றும் ஹேரத் தெரிவித்துள்ளார்.

# சுற்றிவளைப்பின் போது கைதானோருக்கு என்ன நடந்தது

### மூடிமறைக்காமல் தெளிவு படுத்துங்கள் ஈபி கோருகிறது.

அம்பாறை மாவட்டத்தில் 27259 தமிழர்கள் அகதிகளாக அகதி முகாம்களில் இருக்கின்றனர். இவர்கள் சுகாதாரச் சீர் கேடுகள், உணவு வழங்குவதில் உள்ள பாரபட்சங்கள், பாதுகாப்பின்மை, ஊர் காவல் படையினரால் கடத்தப்படுதல் போன்ற கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளனர்

இவர்களில் அரச, தனியார் நிறுவனங்களில் கடமை புரிவோருக்கு போக்கு வரத்து கஷ்டங்களால் தத்தம் தொழிலகங்களுக்கு போக முடியாதுள்ளது. மேலும் அகதிகளாயுள்ள அன்றாடத் தொழிலாளர்களுக்கு தொழில் இல்லை. அதனால் பெரும் பணக்கஷ்டத்தை அவர்கள் எதிர் நோக்கியுள்ளனர்.

எனவே அகதிகள் உள்ள இடங்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்குவதோடு உணவு, சுகாதார சீர்கேடுகளை நீக்கி அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் கிடைக்க வழிசெய்யவும் தாக்கப்பட்ட கிராமங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் நிவாரணம் கிடைக்கவும் செய்ய வேண்டும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட அகதிகளின் நிலை குறித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது

கிராமங்களில் சுற்றி வளைத்த தேடுதலின் போது கைதானவர்கள் இதுவரை எங்கு வைக்கப்பட்டுள்ளனரென்பது தெரியாமல் உள்ளது இது பற்றி இராணுவ பொலிஸ் அதிகாரிகளிடம் விசாரித்தால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தை சொல்லுகின்றனர். இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு தலையிட்டு கைதானோரில் எத்தனை பேர் உயிரோடு உள்ளனர்?எங்கெங்கே வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

## குடியமர்த்தல்

மீள்குடியமர்த்தல் சம்பந்தமாக ஆராயப்பட்ட போது தமிழ் முஸ்லீம் சமூகங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு சமாதானமாக எவ்வித பிரச்சினையுமின்றி வாழ வேண்டும் என கருத்து தெரிவிக்கப் பட்டது. ஆனால் தமிழர்கள் முஸ்லீம் கிராமங்களை தாக்க வில்லை. புலிகளே தாக்கினார்கள். இதற்கு பதிலடியாகவே முஸ்லீம்கள் தமிழர்களை கொன்றார்கள்.

மேலும் புலிகள் முஸ்லீம்களை கொல்ல மாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமில்லை. அப்படி நடை பெற்றால் முஸ்லீம் களின் நிலைப்பாடு என்னாமுஸ்லீம் ஊர்காவல் படையினர் தமிழ் பிரதேசங்களுக்கு அத்துமீறி பிரவேசித்து அப்பாவி தமிழ் மக்களை கைதுசெய்வது, கொலை செய்வது, கற்பழிப்பது போன்ற சம்பவங்கள் கடந்த சில மாதங்களாக நடை பெற்றுள்ளது. இவை மீண்டும் நடைபெறாமல் இருக்க வேண்டும். தமிழ் பிரதேசத்தில் ஊர்காவல் படையினர் எக்காரணம் கொண்டும் பிரவேசிக்கக்கூடாது. அத்தோடு அந்தந்த கிராமங்களில் பாதுகாப்பு படையினர் முகாம்களை அமைப்பதன் மூலம் புலிகளின் பிரவேசத்தையும் தமது மக்களுக்கு பூரண பாதுகாப்பையும் ஏற்படுத்த முடியும்.

## நகர சுத்தி தொழிலாளர் நிலை

அம்பாறை மாவட்டத்தில் வாழும் ஏழைகளான நகர சுத்தி தொழிலாளர்களான இவர்களின் அவல நிலையினை இந்நாட்டில் இருக்கின்ற பொது ஸ்தாபனங்களோ அல்லது அரசியல் கட்சிகளோ பாராமுகமாக இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். இந்நாட்டின் சுகாதாரம் கெடாமல் பாதுகாப்பதில் முக்கிய பங்கினை இவர்கள் வகிக்கிறார்கள். இவர்கள் குறிப்பாக அம்பாறையிலும் சம்மாந்துறை தமிழ் குறிச்சியிலும் சிறு குடிசைகளிலும் தங்களது சீவியத்தை நடத்தியவர்கள்.

கடந்த வன்செயலின் போது இவர்களது வீடுகள் அனைத்தும் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது இவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு செல்லக் கூடிய நிலையிலும் இல்லை. எனவே பொது ஸ்தாபனங்களோ அல்லது அரசோ இவர்களின் துயர் துடைக்க வழி செய்ய வேண்டும். அத்தோடு இவர்களின் சம்பளப் பணத்தினையும் பெற்றுக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# விடுதலைப்புலிகளுக்கு திமுக கட்சி உதவுகிறது. ராஜீவ் குற்றச்சாட்டு

விடுதலைப்புலிகளுக்கு திமுக கழகம் உதவி வருகிறது என்று இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி குற்றம் சாட்டினார். இந்திராகாங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசும்போது இந்தக் குற்றச்சாட்டை அவர் வெளியிட்டார். விடுதலைப்புலிகளுக்கு தமிழகத்தில் ஆளுங்கட்சியான திமுக கழகம் உதவி வருகிறது. பஞ்சாப் அசாம் வழியில் தமிழகம் சென்றுகொண்டிருக்கிறது என்று ராஜீவ்காந்தி எச்சரித்தார். தமிழகத்தில் நிலமையை சமாளிக்க கூட்டு நடவடிக்கை திட்டம் ஒன்றை இ. காங்கிரசும், அதிமுக வும் வகுக்கும் என்றும் ராஜீவ் காந்தி நம்பிக்கை தெரிவித்தார். இப்பிரச்சனை தொடர்பாக பிரதமர் பயணிக்கக்கூடிய நடவடிக்கையை மேற்கொள்வார் என தாம்நம்புவதாக ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.

# வடக்கு கிழக்கு இணைந்த மாகாண அமைப்பிலேயே நிரந்தர தீர்

### அஷ்

தமிழ் முஸ்லீம் அரசியல்கட்சிகளுக்கிடையில் இடம் பெற்ற பேச்சு வார்த்தைகளின் பிரகாரம் சுமுகமான அரசியல் தீர்வுக்கு இடமுண்டு என ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண அமைப்பில்தான் நிரந்தரமான அரசியல் தீர்வைக் காணமுடியும் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

இதே வேளை, முஸ்லீம் மக்களின் பாதுகாப்பு, தனித்துவம் அபிலாஷைகள் என்பனவற்றை பாதுகாக்க கூடியவகையில் முஸ்லீம் பிரதேச அமைப்பு உருவாக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்.

தமிழ் கட்சிகளும், முஸ்லீம் கட்சிகளும் சில ஆரோக்கியமான உடன் பாடுகளுக்கு வந்துள்ளன.

வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண அமைப்பு ஒன்றும், அதைவிட தமிழ், முஸ்லீம் பிரதேச அமைப்புகள் இரண்டும் அமைய வேண்டும்.

இந்தப் பிரதேச அமைப்புகளுக்கான பாதுகாப்பு, கல்வி, அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியன தொடர்பாக அதிகாரங்களை வழங்கிட இணக்கங்கள் காணப்பட்டுள்ளன.

மேற்படி இனரீதியிலான பிரதேச அமைப்புகளான எல்லைகள் தொடர்பாகத் தற்போது பேசப் பட்டு வருகிறது. கூடியவிரைவில் நல்லமுடிவு காண முடியும் எனவும் அவர் தெரிவித்தார்

> 'பாசிசம் எவ்வளவுதான் வலிமையுடையதாக இருந்தாலும்
> அறிவுள்ள, ஜனநாயகம் விரும்பும் ஒரு சமூகம் அதற்கு பணிந்து போகமுடியாது.'
>
> தோழர். பெ. கிருபாகரன்.

# போராளிகளை கைது செய்யாதீர்
## டெலோ கோரிக்கை

அகதிகள் முகாம்களில் அடைக்கலம் புகுந்து தங்கியுள்ள போராளிகளையும் அப்பாவிகளையும் கைது செய்வதை மத்திய,மாநில அரசுகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அமைப்பாளர் ஜி.எஸ்.கந்தா, அரசியல் பிரிவுத் துணைச் செயலாளர் வி.ஸ்ரீதாஸ் ஆகியோர் கோரியுள்ளனர்

இந்திய தமிழக அரசுகளின் சட்ட திட்டங்களை மதித்து நடக்கும் எந்தப் போராளியாக இருந்தாலும் அவர்களைக் கௌரவிக்க வேண்டிய தமிழக அரசு அவர்களைத் தேடி கைது செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும்.நம்பி வந்து அடைக்கலம் புகுந்து முகாம்களில் தங்கியுள்ள போராளிகளையும் அரசியல் ரீதியாக நடப்பவர்களையும்,அப்பாவி இளைஞர்களையும் குடும்பத்துடன் உள்ளவர்களையும் கைது செய்யும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஓர் அறிக்கையில் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ் ஈழம் என்ற ஒரு நிரந்தர தீர்வின் மூலம்தான் இந்தியாவின் தென் பகுதியில் நிரந்தரமானதொரு பாதுகாப்பை இந்தியா பெற முடியும் என்று குறிப்பிட்டுள்ள அவர்கள்,இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் விடிவுக்கு காலதாமதமற்ற உதவியை மத்திய அரசு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

# மக்களுக்காக குரல் கொடுக்க ஜனநாயக சக்திகள் முன்வர வேண்டும்
## ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் அழைப்பு.

கட்டாய வெளியேற்றத்தின் மூலம் தமிழ் பேசும் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியேறும் நிலையைச் சீர்குலைக்கும் புலிகளின் விரோத நிலைப்பாட்டை கண்டிப்பதாக ஈ.பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் தோழர் க. பிரேமச்சந்திரன் எம். பி. அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்

இதனைக் கண்டும் காணாது பாராமுகமாக இருக்கும் அரசின் நடவடிக்கைக்கு எதிராக ஜனநாயக சக்திகள் குரல் கொடுக்க வேண்டுமெனவும் அவர் அறிக்கையில் கேட்டுள்ளார். அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது -

இப்போது நடைபெறும் யுத்தம் தமிழ்மக்களை சொந்த நலனுக்காக பாவிக்கின்ற நிலைமைக்கு கொண்டு செல்கின்றது என்பதை இச்சம்பவங்கள் நிரூபிக்கின்றன. மக்கள் இல்லாத மண்ணை ஆள நினைப்பவர்கள் காலம் கடந்தாவது உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் பேசும் மக்கள் முஸ்லீம் ஊர்காவல் படையாலும், இராணுவத்தாலும், மறுபுறம் புலிகளாலும் இருபக்க நெருக்குதலுக்குள்ளாகி சிக்கி தவிக்கின்றனர்.

வந்தாறுமூலை பல்கலைக் கழக அகதி முகாம், சித்தாண்டி முருகன் ஆலயம், கிரான் ஆச்சிரமம், கோரக்கல்லிமடு பாடசாலை ஆகியவற்றில் தங்கியிருந்த அகதிகளும் புலிகளால் முற்றாக வெளியேற்றப்பட்டுள்ளனர். 15,000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 60,000 பேர் இந்நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

வேதனையின் விளிம்பில் நடமாடும் மக்களை விரக்தியான நிலைக்கு தள்ளிவிடும் இத்தகைய நிலைமைகள் தொடராதிருக்க மக்களை முகாம்களில் வைத்து பராமரிக்க உடனடியாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
இல்லையேல் உடைமைகளை இழந்த அகதி வாழ்க்கைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் உயிரிழப்பிற்கு உள்ளாவதும் தவிர்க்க முடியாததாகிவிடும். இன்று மக்களின் எதிர் பார்ப்பு மோதல்கள் தொடர்வதை விரும்பவில்லை. அத்தகைய நிலைமையை தோற்றுவித்தவர்கள் மீது கடுமையாக அதிருப்தி அடைந்துள்ளனர். இந்நிலைமையில் மக்களை பயணக் கைதிகளாக பாவிக்கவே புலிகள் ஈவிரக்கமற்ற செயலை செய்துள்ளனர்.

# யுத்தத்தின் முழு பொறுப்பும் அரசையே சாரும்.
## ஐ.தோ.தொ.சங்க பொதுச் செயலாளர்

வடக்கு - கிழக்கு யுத்தத்தை காரணமாக வைத்துக்கொண்டு மக்களது அன்றாட பாவனைப் பொருட்களின் விலையை அரசு பன்மடங்காக உயர்த்தியுள்ளது. அத்துடன் தொழிலாளர்களுக்கு எவ்வித சம்பள உயர்வையும் அரசு வழங்கவில்லை என ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்க பொது செயலாளரும், சப்ரகமுவ மாகாண சபை அங்கத்தவருமான ஏ. வில்லியம் மேற்படி சங்க பதுளைக் கிளைக் காரியாலயத்தில் இடம் பெற்ற தோட்டத்தலைவர்கள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இன்றைய வட-கிழக்கு யுத்தத்தால் முழுநாடு மேசின்னாபின்னமடைந்துள்ளது. இந்திய அமைதி காக்கும் படையை இலங்கையிலிருந்து உடனடியாக வெளியேறும்படி மக்கள் விடுதலை முன்னணியினரோடு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரும் தெற்குப் பகுதியில் பெரும் கோஷங்கள் இட்டனர்.

அதே வேளையில் இந்திய அமைதி காக்கும் படையை நமது நாட்டிற்கு கொண்டுவந்த இன்றைய அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களும் இந்திய அமைதி காக்கும் படை உடனடியா வெளியேற வேண்டும் என கோஷங்கள் இட்டதை எவரும் மறந்துவிட முடியாது. அதேவேளையில் எவருக்காக அமைதி காக்கும் படை இலங்கைக்கு வந்ததோ அவர்களின் ஏகபோக பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்ட புலிப்படையினரும் அவர்களை உடனடியாக இலங்கையைவிட்டு வெளியேறும்படி போராடினர்.

இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையினர் பலர் கொல்லப்பட்டதையும் நாம் மறந்து விட முடியாது. எது எப்படியிருப்பினும் இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கையை விட்டு நீங்கியபின் என்ன நடந்தது என்னவென்று பார்ப்போம்.

கடந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஈ.பி.ஆர்.எல். எவ். அரசைவிட்டு, காட்டிலே ஒளித்திருந்த புலிப்படையினரிடம் அரசு கைகோர்த்து இரகசியமாகவும் பேச்சு வார்த்தை நடத்தியது மட்டுமல்ல, புலிப்படையினருக்கு ஆயுதங்கள் வழங்கியதையும் எவரும் மறந்து விடமுடியாது.

அதற்கு வடக்கு-கிழக்கு மாகாண அரசு தனிப்படை ஒன்று அமைத்துள்ளதாகவும் அவர்களை அழிப்பதற்குமே ஆயுதங்கள் வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.அது இப்பொழுது எவ்வளவு பெரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் கூறாமலே சகலரும் தெரிந்து கொள்ளலாம்.

இந்திய அமைதிப்படையினர் இலங்கையைவிட்டு விலகியவுடன் அந்த இடங்களுக்கு இலங்கை பொலீஸ்படையை நிறுத்தியிருந்தால் இவ்வளவு பெரிய அனர்த்தங்கள் ஏற்பட்டிருக்காது. ஆகையால் யுத்தத்திற்கு முழுப்பொ சாரும் அரசாங்கத்தையேறப்பும்.

# புலிகளின் கடத்தலுக்கு வசதி செய்வதா ஈ.பி.ஆர்.எல்.எப்.புகார்

திருச்சி மண்டபம் முகாம்களிலிருந்து ஈ.பி.ஆர். எல். எப். போராளிகளை தமிழக அரசு கைது செய்து வெளியேற்றியதால் இங்குள்ள கடற்கரையோர பகுதிகளில் புலிகள் கடத்தல் வேலைகளை சுலபமாக செய்ய முடிகிறது என்று ஈ.பி.ஆர்.எல். எப். குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து ஈ.பி.ஆர். எல். எப். விடுத்த அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது-

இலங்கை அகதிகள் தமிழகம் வந்ததிலிருந்து அவர்களை தமிழக அரசு துன்புறுத்தி வருகிறது. நூற்றுக்கணக்கான அகதிகளை சிறையிலடைத்தது. இத்தனை துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு நாங்கள் சட்டம் ஒழுங்கை மீறாமலேயே நடந்து வந்தோம். ஆனால் இரண்டு வாரங்களுக்கு முன் திருச்சி மண்டபம் அகதி முகாம்களில் சட்டப்படி பதிவுசெய்து போலீசாரின் தொடர்ச்சியான கண்காணிப்பில் இருந்து எங்களது கட்சியை சேர்ந்தவர்களை சுற்றி வளைத்து போலீசார் கைது செய்துள்ளனர்.

குற்றவாளிகளை போல் கைது செய்து இழுத்து வந்து சென்னை அருகே புழலில் அடைத்து வைத்துள்ளனர். இவர்கள் அங்கு உணவு வசதியின்றி கஷ்டப்படுகின்றனர். இதே போல் மண்டபம் முகாமிலிருந்து கர்ப்பிணிப் பெண்களும், சிறுவர்களும் கூட கதறக் கதற இழுத்து வரப்பட்டுள்ளனர்.

புழலில் அடைத்து வைக்கப்பட்டுள்ள கர்ப்பிணி பெண்கள், சிறுவர்களுக்கு பல்துலக்க பல்பொடி கூட கொடுக்கப்படுவதில்லை. மேலும் டீ மற்றும் காலை உணவும் வழங்கப்படுவதில்லை. உறவினர்களுடன் கடிதத் தொடர்பு மற்றும் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்ளவும் தடை செய்யப்பட்டுள்ளது இதனால் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறுவர்களின் படிப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

திருச்சி, மண்டபம் முகாம்களிலிருந்து ஈ.பி.ஆர். எல். எப். போராளிகளை வெளியேற்றுவதற்கு ஏற்கனவே அரசு முயன்று வந்ததையும் அதற்காகவே எங்கள் மீது அவதூறு சுமத்தி வந்ததையும் அறிக்கை மூலம் ஏற்கனவே அரசுக்கு சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

இப்போது திருச்சி, மண்டபம் முகாம்களிலிருந்து எங்களை கைது செய்து வெளியேற்றியதினால் இந்த கடற்கரை பகுதிகளில் புலிகள் தங்களது கடத்தல் வேலைகளையும், சதி வேலைகளையும் செய்ய வசதியாகி விட்டது. புலிகளின் முக்கிய பிரசாரகரும், கவிஞருமான காசியானந்தன் திருச்சியில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.வேலூரில் பத்து புலிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கிரிமினல்களை வெளியே உலவவிட்டு சட்டப்படி அகதிகளாக இருக்கும் எங்களை அடைத்து வைத்திருப்பது அநீதி எங்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழக அரசையும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

காங்கிரஸ் தலைவர்களை கொல்லத் திட்டம்

# விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து திமுக எம் எல் ஏக்கள் சதி.
## வாழைப்பாடி ராமமூர்த்தி புகார்.

விடுதலைப் புலிகளின் உதவியோடு காங்கிரஸ் தலைவர்களைக் கொல்ல தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர்களே சதிசெய்கிறார்கள் என்று குற்றம் சாட்டிய இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழைப்பாடி ராமமூர்த்தி, தான் கூறியதற்கு ஆதாரமாக கடிதம் ஒன்றின் நகல்களையும் நிருபர்களிடம் வழங்கினார்.

தமிழ் நாட்டில் ஆயுதங்களோடு நடமாடுகிற விடுதலைப் புலிகளை கைது செய்யாமல், ஏற்கனவே அகதிமுகாம்களில் நிராயுத பாணிகளாக உள்ள அப்பாவிகளைத் தமிழக அரசு கைது செய்வது வருந்தத்தக்கது என்று தமிழ்நாடு இ.காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழைப்பாடி கே.ராமமூர்த்தி கூறினார்.

திங்கள்கிழமையன்று மாலை சத்தியமூர்த்தி பவனில் நிருபர்களிடம் பேசிய அவர், அவ்வப்போது இத்தனை போராளிகளைக் கைது செய்தோம் என போலீஸ் கணக்கு காட்டிக் கொண்டிருக்காமல், உண்மையிலேயே தமிழகத்தில் குழப்பம் விளைவிப்பவர்களைக் கைது செய்ய முதலமைச்சர் கருணாநிதி முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

### திமுகவே திட்டம்

தமிழ் நாட்டில் குழப்பம் விளைவிப்பதற்கு தி.மு.க.வைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்களே திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக காங்கிரஸ் தலைவர்களை விடுதலைப் புலிகளின் உதவியோடு வெடிகுண்டு வீசிக் கொலை செய்வதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ராஜபாளையத்தைச் சேர்ந்த தி. மு. க சட்டப் பேரவை உறுப்பினர் வி.பி. ராஜன் "பாஸ்கர், நெல்லை முகாம்" என்ற விலாசத்திற்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.அந்தக் கடிதத்தில் தி. மு. க ஆட்சி கலைக்கப்பட்டால் ராஜபாளையத்தில் கலவரம் நடத்த திட்டமிருப்பதாகவும் ராஜபாளையத்தில் கலவரம் நடத்த திட்டமிட்டிருப்பதாகவும், ராஜபாளையம் நகர மன்றத் தலைவர் சுப்புராஜாவின் அலுவலகத்தில் வெடிகுண்டு வீசி அவரை கொலை செய்வதற்கு பாஸ்கரின் உதவியை நாடுவதாகவும் குறிப்பிட்டு அவர் கையெழுத்திட்டுள்ளார் என்றுகூறி அந்தக் கடிதத்தின் நகல்களை நிருபர்களிடம் வாழைப்பாடி ராமமூர்த்தி அளித்தார்.

அகதிகள் முகாம்களில் நிராயுதபாணிகளாக இருப்பவர்களைக் கண்துடைப்புக்காக கைது செய்வதை விட்டு விட்டு முதலில் தனது கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினரைக் கைது செய்ய கருணாநிதி முன்வருவாரா? என்றும் அவர் கேட்டார்.

மேற்குறிப்பிட்ட சட்டப் பேரவை உறுப்பினரின் கையெழுத்தை தாம்சரி பார்த்து விட்டதாகவும் கடந்த மக்களவைத் தேர்தலின் போது ராஜபாளையத்தில் வாக்குச் சாவடியில் பணியாற்றிய இ.காங்கிரஸ் ஏஜண்ட் குருமூர்த்திராஜா என்பவர் கொலை செய்யப் பட்ட வழக்கில் இவர் தொடர்புடையவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குடியரசுத் தலைவரை தாம் சந்தித்து சுமார் அரைமணி நேரம் மரியாதை நிமித்தம் பேசிக்கொண்டிருந்ததாகச் சொன்ன அவர் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து அப்போது நான் புகார் ஏதும் அவரிடம் கூறவில்லை. மேலும் நான் சொல்லித்தான் மாநிலத்தின் நிலவரம் அவருக்கு தெரிய வேண்டும் என்பதில்லை.அவருக்கே அதுபற்றி நன்கு தெரியும் என்றார்.

தமிழகம் வரும் பிரதமரிடம் தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கு நிலை உள்ளிட்ட அம்சங்கள் பற்றி புகார் கூறி மனு எதையும் தாங்கள் தரப்போவதில்லை என்றும் அவர் சொன்னார்.

விலைவாசி உயர்வு, மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு நிலவரம் உள்ளிட்ட விவரங்கள் குறித்து தமது கட்சி கூடி விவாதித்து என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி ஏற்கனவே அறிவித்தபடி முடிவு செய்யும் தோழமைக் கட்சியினரையும் இணைத்துக் கொண்டு செயல் படவும் உத்தேசித்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

நாம் மக்களுக்காகப் போராடுவது எம்மீது சுமத்தப்பட்ட
கடமையே தவிர எமக்கு வழங்கப்பட்ட அதிகாரம் அல்ல.'

தோழர். க. பத்மநாபா.

www.padippakam.com



## புலிகளின்,மா:பியா,மொசாட் உறவும்

# போதை மருந்து கடத்தலும் அம்பலம்.

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்" என்னும் தாரக மந்திரத்துடன் தமிழர்களுக்காக போராடி வரும் எஞ்சியுள்ள விடுதலைப் புலிகள்தான் ஒரேயொரு சிறந்த போராட்ட இயக்கம் என பலபேர் தம்மைக் காத்துக் கொள்ள மார் தட்டி வருகின்றனர். ஜனநாயக மறுப்பு, அராஜகம் என்பவற்றையெல்லாம் தமக்கு சொந்த மாக்கிக்கொண்டு பாசிச கைக்கூலிகளாக சேவகம் செய்து வரும் புலிகள் தமக்கு வேண்டியும் ஏனைய இயக்கங்களை தடைவிதித்து, பலவீனப் படுத்தி, அழித்தொழித்ததுதான் இன்று எஞ்சியுள்ள இயக்கமாக மிஞ்சியுள்ளனர் என்பது இந்த மார் தட்டும் மாமனிதர்களுக்கு தெரிந்திருந்தும் உண்மையை உமிழ்ந்து விழுங்கி விட்டு பொய்மையாக, போலியாக பேசி வருவது புலிகளுக்கு வாய்ப்புக்கள் வளர்த் தெடுக்கப் படாதா என்ற ஆதங்கம் தான்.

இந்தப் புலிகள் தமிழ் சமூகத்தை காப்பாற்ற,விடுதலை செய்யவென்று கூறி (தங்களை காப்பாற்றதான் என்பது வேறு விடயம்) உலகில் பல சமூகங்களை அழித்து வரும் மனித நேய மனிதர்கள் வெறுத்து வரும் போதைப் பொருள் வியாபாரத்தின் மூலம் ஆயுதங்களை வாங்கி அர்த்தமற்ற யுத்தங்களை தொடுத்து மக்களை அழித்து வருகின்றனர் என்பதுவும், இவர்கள் யாருடன் யுத்தத்தை மேற்கொண்டு வருகிறார்களோ அதே இலங்கை இராணுவத்துடன்,உலகப் பயங்கர வாத இயக்கமான இஸ்ரேலிய மொசாட் குழுவினரிடம் ஒரே இடத்தில் பயிற்சி பெற்றனர் என்பதும் இன்று உலகளாவிய ரீதியில் அம்பலப்படுத்தப்பட்டு வருகிறது. சர்வதேச போதைக் கடத்தல் காரர்களான மா:பியா கூட்டத்துடனும் உலகப் பயங்கரவாதக் குழுவான மொசாட்டுடனும் இவர்களது உறவு ஆதாரங்களுடன் அம்பலமாகியுள்ளது. அவர்கள் மா:பியா கூட்டத்தின் பங்காளியானாலும் மொசாட் குழுவின் கூட்டாளியானாலும் நாம் அலட்டிக் கொள்ள தேவையில்லை. எம்மை பொறுத்தவரை ஆயுதம் எப்படிக் கிடைக்கிறது என்பது முக்கியமல்ல நாம் ஐரோப்பாவில் வசதியாக வாழ களத்தில் தொடர்ந்து சண்டை என்று செய்தி வந்தால் போதும் என்கின்ற கூட்டத்தினரை விட மனித நேயம் கொண்ட மக்களை, உண்மையான நேர்மையான விடுதலை விரும்பிகளை இது அதிர்ச்சியுறவே வைக்கிறது.

புலிகளுக்கும் மொசாட்டினருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்குமிடையிலுள்ள சங்கிலி தொடர் உறவை, மொசாட்டில் நான்கு வருடங்கள் சைமன் லாகாவ்(SIMON LAHAU) என்ற புனைப்பெயரில் இராணுவ பயங்கரவாத பயிற்சியாளராக பணியாற்றி வந்த விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி(VICTOR OSTROVSKY) எழுதி வெளியிட்டுள்ள "BYWAYOFDECEPTION" என்னும் நூலில் வெளியிட்டுள்ளான். ஸ்ரீலங்காவில் இருந்து லண்டன் வழியாக இஸ்ரேலுக்குள் ஐம்பது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சென்றடைந்தனர். அமி என்ற பயிற்சியாளரும் சைமன் லாகாவும் ஜோசி என்னும் பயிற்சியாளருமே இவர்களுடனான பயிற்சியில் சம்பந்தப் பட்டிருந்தனர். ஆபிரிக்கா தூர கிழக்கு நாடுகளின் மொசாட் நாச வேலைகளுக்கான பொறுப்பாளராக அமி இருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சைமன் லாகா ஸ்ரீலங்கா கூலிப்படையினருக்கும், ஜோசி என்பவன் புலிகளுக்கும் பயிற்சி அளித்தார்கள். ஸ்ரீலங்கா கூலிப்படையினருக்கு KAFAR SHIREIN என்னுமிடத்திலும் புலிகளுக்கு கடற்படை தளமொன்றிலும் பயிற்சி அளித்தனர். ஸ்ரீலங்கா கூலிப்படையினருக்கு பயங்கரவாத முறியடிப்பு பயிற்சிகளை அளித்ததோடு விசேட இயந்திரப் பீரங்கி படகுகளை நிர்மூலமாக்கும் பயிற்சிகளை அளித்தனர். KAFAR SHIRKINஎன்னும் பயிற்சி தளத்தில் இராணுவத்தினர் பயிற்சி பெற்ற அதேவேளையில் மறு புறத்தில் புலிகளுக்கும் பயிற்சி வழங்கப் பட்டது. இப்பயிற்சி தளம் பாரிய தளமாக இருந்தமையால் ஒருவரை ஒருவர் கண்டு கொள்ளவில்லை.

சில வேளைகளில் பயிற்சியின் போது ஒருவருக்கு தெரியாது மற்றவர்கள் அருகருகே பயிற்சி பெற்றுள்ளனர்.BY WAY OF DECEPTION.என்ற நூலின் 127 -131 ம் பக்கங்களில் இப்பயிற்சிகள் பற்றி எழுதியுள்ள சைமன் லாகாவ் எனப்படும் விக்ரர் ஒஸ்ரோ வெஸ்கி, இலங்கையரை குரங்குகளைப் போன்றவர்கள் , விருத்தியடையாத இடத்திலிருப்பவர்கள் , மரங்களை தவிர இவர்களுக்கு அதிகம் எதுவும் தெரியாது என்று வர்ணித்துள்ளான். கொலம்பியாவிலிருந்து அமெரிக்காவுக்கு போதைமருந்து கடத்தும் மா:பியா கும்பலின் பெரும்புள்ளிகளில் ஒருவனான ரோட்ரிக்ஸ் கச்சா என்பவன் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் தனது தொழிலை விரிவு படுத்துவதற்கு மொசாட்டின் துணையுடன் புலிகளை பயன் படுத்தியுள்ளான். புலிகளுக்கு மொசாட்டின் மூலம் பயிற்சி அளிப்பதற்கு நன்றிக் கடனாக ஐரோப்பிய நாடுகளுக்கு கொக்கையின் போன்ற அதிபயங்கர போதை பொருட்களை புலிகள் மூலம் கடத்துவதென்பது இவர்களின் திட்டமாகநடைமுறைப் படுத்தப்பட்டது.இப்போதைப் பொருள் வியாபாரத்தின் மூலம் கிடைக்கும் கோடிக்கணக்கான ரூபாய்களை கொண்டு ஆயுதங்களை வாங்கமுடியுமென்று கச்சா ஆசை வார்த்தைகள் காட்டியதன் மூலம் புலிகள் ஒத்துக்கொண்டனர். ஆன்டிக்குவா என்னும் கரீபிய தீவில் கொலம்பிய கடத்தல் காரருக்கும் புலிகளுக்கும் பயிற்சி அளிக்க மொசாட்டை கச்சா ஒழுங்கு செய்தான். இன்னுமொரு தடவை மாக்டெலனா என்னுமிடத்தில் புலிகளுக்கு பயிற்சி அளிக்க 1989 ல் கச்சா ஒழுங்கு செய்த போது இச்செய்தி வெளியாகத் தொடங்கியதும் பிரேசிலுக்கு கச்சா தப்பியோடினான்.

பயிற்சிகள் ஒருபக்கம் நடக்கும் போது மறுபக்கத்தில் கொலம்பிய போதை பொருள் கடத்தல் காரருடன் புலிகள் தமது உறவை விருத்தி செய்து கொண்டனர்.

1984 ல் லண்டன் கீத்துறு விமான நிலையத்திலூடாக இருபத்தையாயிரம் பவுண்டுகள் மதிப்புள்ள கிரோயின் எனப்படும் போதை மருந்து கடத்தப்பட்டது. இது தொடர்பாக இரகசிய பொலிசார் நடாத்திய வேட்டையில் பத்து புலிகளை லண்டனில் வைத்து கைது செய்தனர். 1987 ல் மேற்கு ஜேர்மனியில் இருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட சூரிய குமாரன் செல்வத்துரை என்னும் புலி, லண்டன்ரைம்ஸ் என்னும் பத்திரிகை நிருபரிடம்,இரண்டுகிலோ போதை மருந்தை,எண்பதாயிரம் பவுண்டு கூலியாக தந்தால் தமது ஆட்கள் மூலம் சரக்கை லண்டனில் சேர்த்துவிடுவதாக பேரம் பேசியுள்ளார்.அந்த நிருபர் ஆத்திரமடைந்து, இதுமனிதத்தன்மையற்ற இழிசெயல் என் பேசிய போது,எங்களுக்கும் இது பிடிக்காதுதான் ஆனால் எமது விடுதலை போராட்டத்திற்கு ஆயுதம் வாங்குவதற்கே இதை செய்கிறோம் என்று நியாயபடுத்தியுள்ளார் என இதுபற்றிய விபரத்தை லண்டன் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

1990 ஜனவரியில் அமெரிக்காவின் நியூ ஓலியன்ஸ் துறைமுகத்தில் இருபது லட்சம் டொலர் மதிப்புள்ள கொக்கேயின் போதை மருந்து கைப்பற்றப்பட்டதுடன் மூன்று புலிகள் கைதாகினர். போதைமருந்து கடத்தலை புலிகள், இந்தியாவிலிருந்து ஆபிரிக்க நாடுகளுக்கும் பின்பு அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும் மேற் கொண்டு வந்துள்ளனர் . கென்னியா, நைஜீரியா நாடுகளிலுள்ள போதை பொருள் கடத்தல் காரர்களை புலிகள் பயன் படுத்தியுள்ளனர் என்பதை சுவிஸ் நாட்டு சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தவிர அண்மையில் மலேசியாவில் கைப்பற்றப்பட்ட அமெரிக்க ஆயுதங்கள் மூலம் ஸ்ரீலங்கா-புலிகள்-அமெரிக்கா உறவுகள் மீண்டும் அம்பலமாகியுள்ளது.1990 நவம்பரில் தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு புலிகளால் கடத்தப்பட்ட மூன்று விசைப் படகுகளிலிருந்த ஆயுதங்கள் மலேசியாவில் வைத்து மலேசிய சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப் பட்டுள்ளது இப்படகுகளில் ஆயுதங்களை கடத்திவந்த முப்பத்திமூன்று 'புலிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச்செய்தியை 'தி, ரைம்ஸ்' என்னும் பத்திரிகை வெளியிட்டுள்ளது. 1975 ம் ஆண்டு வியட்நாம் புரட்சியில் வெற்றிபெற்றபின்பு அமெரிக்கா தனது எஞ்சியுள்ள ஆயுதங்களை தான் தளங்கள் அமைத்துக் கொண்ட நாடுகளில் வைத்து வியாபாரம் செய்து வருகிறது. இதே போன்ற தாய்லாந்து வியாபார தளத்திலேயே புலிகள் கொள்வனவு செய்துள்ளனர். அமெரிக்காவின் இந்த ஆயுதச் சந்தையில் ஸ்ரீலங்காவும் ஆயுதங்கள் வாங்கியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சர்வதேச பயங்கரவாத கும்பல்களுடன் பயங்கரவாத தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதன் மூலம் அமைதிக்கும், சமாதானத்திற்கும் அச்சுறுத்தலாக இருந்து வரும் புலிகளை மக்களை மீட்க வந்த மீட்பர்கள் என்று இனும் நம்பிக் கொண்டிருப்பது வேடிக்கையும் வேதனையுமாகும்.

> **எமது சமூகத்தின் விடியலுக்காக இன்னொரு நாட்டின் சமூகத்தை அழிக்கும் போதை பொருள் கடத்தல் மூலம் நிதிதிரட்டும்இழிசெயலை வன்மையாக எதிர்க்கிறேன்.**
>
> தோழர். க. பத்மநாபா.

## அரசியல் தீர்வு

அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கையினால் வடக்கு கிழக்கு மக்களின் அபிலாசைகளை வெல்ல முடியாது. ஆகையால் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் அதே வேளையில் அரசியல் தீர்வு காண ஏனைய அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என லிபரல் கட்சியின் தலைவர் டாக்டர் சாணக்க அமரதுங்கா கட்சி அலுவலகத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக அவர் தொடர்ந்து விபரிக்கையில் கூறியதாவது

ஜனநாயக வழிக்கு வரவிரும்பாத புலிகளுக்கெதிராக இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வரும் அதேவேளையில் ஏனைய இயக்கங்கள் அரசியல் கட்சிகளைக் கொண்டு புதிய மாகாண சபையை அமைக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

## காண அரசு முன்வர வேண்டும்.

### லிபரல் கட்சி

டும்.கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடாத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வடமாகாணத்திலும் அந்த சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

மாகாணசபைகளுக்கு சுயநிர்ணய கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் தேசியபிரச்சனைக்கு தீர்வு காண சமஷ்டி ஆட்சி முறையை அரசாங்கம் வழங்க வேண்டும் என நாம் அரசாங்கத்தை கேட்டுள்ளோம். இது தொடர்பாக அரசியல் கட்சிகளின் மாநாட்டை அரசாங்கம் உடனடியாக கூட்ட வேண்டும்.

## கூட்டு மாநாடொன்றை கூட்ட புளொட் நடவடிக்கை

இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வொன்றைக் காண்பதற்கு அரசியல் கட்சிகள் மத்தியில் இணக்கமொன்றை ஏற்படுத்துவதற்காக, அரச எதிர்க்கட்சிகள் மாநாடொன்றை கூட்டுவதற்கு புளொட் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்நடவடிக்கை தொடர்பாக ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் த. சித்தார்த்தன் கொழும்பில் ஐ. தேசியக் கட்சி பொதுச்செயலாளர் ரஞ்சன் விஜேரத்ன, எதிர்க்கட்சி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்த்தன, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி தலைவர் ஓஸி அபே குணசேகர ஆகியோரை சந்தித்து பேசவிருக்கிறார்.

வடக்கு கிழக்கில் யுத்தம் நடக்கின்ற வேளையில் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சனைக்கு நீதியான அரசியல் தீர்வு காணும் நடவடிக்கைகள் தட்டிக்கழிக்கப்படக்கூடாது. அரசுடன் பேசி நீதியான தீர்வுக்கு முயற்சி செய்யப்படும் வேளையில் தென்னிலங்கை பிரதான அரசியல் கட்சிகளின் ஆசீர்வாதங்களும் அதற்கு அவசியமாகும்.

பிரதான தென்னிலங்கை கட்சிகளான யு.என். பி., சுதந்திரக்கட்சி, தமிழ்க்குழுக்கள் ஒரே இடத்தில் அமர்ந்தால் நல்ல இணக்கமான அரசியல் தீர்வுக்கு வழிபிறக்குமென்பது எமது நம்பிக்கை.

இதன் காரணமாகவே அரச எதிர்க் கட்சிகளின் கூட்டு மாநாடொன்றை கூட்டுவதற்குநாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அனைத்துக்கட்சி மாநாட்டில் பிரதான கட்சிகள் சில ஒதுங்கியுள்ளன, அனைவரையும் நாம் ஒரு மேடைக்கு கொண்டு வந்து தமிழினத்தின் அடிப்படை பிரச்சனைகள் தொடர்பாகஆராய்ந்து முடிவெடுக்க வகை செய்வதே எமது முயற்சி என்று சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

# ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்.

## EELAM PEOPLES INFORMATION CENTRE.

POST BAG - 5551
MADRAS - 600094
INDIA.

B.M. BOX -1738
LONDON-WCIN-3XX
U.K.

POST FACH - 100206
4600 DORTMUND - 1
WEST GERMANY.

POST BOX - 52
LAVERTON
VICTORIA-3028
AUSTRALIA.

P.BOX. 6800
AGINCOURT
ONTARIO M1S3C6
CANADA.

BOITE NO - 69
7 - RUE RACINE
95140 - GARGES
FRANCE.

POST BOKS -115
GROURD HAGEN
0905 - OSLO - 9
NORWAY.

